நல்ல நிலமாகு நண்பா

# விதைகள்

VOL-2 ISSUE-23 APRIL 2023



## 7 வார்த்தைகள்

மற்றும் கூடுதல் தகவல்கள்

ஆசிரியர் கடிதம்.. ..

**தேவனுக்கே மகிமை உண்டாவதாக!**
ஆண்டவரும் அருமை இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் மறுபடியும் விதைகள் பத்திரிகையின் வழியாக உங்களை சந்திப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். கர்த்தர் நம் அனைவரையும் அவருடைய செட்டையின் நிழலில் தொடர்ந்து பாதுகாத்து வருகிறார் என்பதால் உள்ளத்தின் ஆழத்திலிருந்து அவரை ஸ்தோத்தரிக்கிறேன்.

விதைகள் பத்திரிகைக் குறித்த பலருடைய நிறைகுறை கருத்துக்களுக்கும், பொருளாதார உதவியினால் தாங்குபவர்களுக்கும், நாங்கள் சோர்வுறாதபடிக்கு உற்சாகப்படுத்துபவர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

தவக்காலம், ஆசீர்வாதமாய் கடந்து கொண்டிருக்கிறது, நம் வாழ்வை மறுபரிசீலனை செய்வதற்கும், ஆண்டவருக்குள் இன்னும் அதிகமாக நெருங்குவதற்கும், வேத வாசிப்பிலும், ஜெபத்திலும,; தியானத்திலும் அமர்வதற்கும், தேவன் நம்மை வழிநடத்தி வருகிறார். தவக்காலம் முடிந்தாலும் நம் இறைபக்தி வாழ்க்கை தொடர்ந்தால் மாத்திரமே, தவக்கால கடைபிடிப்புகள் அர்த்தமுள்ளதாக மாறும், இல்லையேல் இது வெறும் நாட்களுக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுத்தது போல் மாறிவிடும். இம்மாத பத்திரிகையில் இயேசுவின் பாடுகளை குறித்த சில தகவல்களும், சிலுவையில் மொழிந்த 7 வார்த்தைகளும் இடம்பெற்றுள்ளது, இதை எழுதிய ஒவ்வொருவருக்கும் நன்றியை கூறிக்கொள்ளுகிறேன். இதை நீங்கள் படிக்கும் போது, இயேசு நமக்காக பட்ட பாடுகளை நினைவு கூர்ந்து அவர் விரும்பும் பரிசுத்த வாழ்வை வாழ நம்மை அர்ப்பணிப்போமாக. ஆமேன்.

Bro.S.மெர்லின்
ஆசிரியர்


**மலர்க்குழு உறுப்பினர்கள்**
**S. மெர்லின் (ஆசிரியர்)**
**K.S. பிரசன்னா மெர்லின் (மேலாண்மை)**
**J. ஜாண் டேனியேல்**
**Dr. அரவிந்த் ஜெயக்குமார் ம.**
**J. ஜாக்குலின் ஷைன்**
**ஹில்டா பாக்கியராஜ்**
Desighn by : NNN



ADDRESS
S.Merlin
16/76 Vettukattuvilai,
Kannanoor -629158
Kanyakumari District
Tamilnadu, India
Phone +919486954577,
Whatsapp +918668047378

## உள்ளே →



தூக்குக்கயிறு 19

சிலுவை
சுமை அல்ல சுகம்!! 02

வார்த்தை 1--22
வார்த்தை 2--25
வார்த்தை 3--33
வார்த்தை 4--37
வார்த்தை 5--41
வார்த்தை 6--47
வார்த்தை 7--52

கூடுதல் தகவல்கள் 13

துணிச்சலான பேதுரு 09


இயேசுவின் கைது 05



# சிலுவை

## சுமை அல்ல சுகம்!!

ஆ.ஜெனில் தாஸ்,
இறையியல் மாணவர், UTC பெங்களூர்.

## இந்தியாவில் சிலுவை:

கிறிஸ்துவுக்குப் பின் ஓரிரு ஆண்டு களுக்குள் கிறிஸ்தவ சமயத்தின் சின்னமாகிய சிலுவை இந்தியாவு க்கு வந்தது. அக்காலம் முதற்கொ ண்டு, ஆங்கிலத்தில் சிலுவையைக் குறிக்கும் 'கிராஸ்' (cross) என்கிற சொல்லும் வழக்கில் இருந்து வருகிறது. "சிலுவை" என்ற சொல் இந்திய மொழிகளில் முதன் முதலில் மலையாளத்தில் வழங்க ப்பட்டது: அங்கிருந்த சிரியன் சபைகளில் சிரியாக்கு மொழி இறை வழிபாட்டு மொழியாக இருந்தது. சிரியாக்கு மொழியில் சிலுவையைக் குறிக்கும் சொல் 'சிலிபோ.' இச்சொல் மலையாள த்தில் "சிலுபை" என்று வழங்கப் பட்டது. அதன் ஆங்கிலச்சொல் சிதைவாகி 'குருசு'என்றானது. பிறகு தமிழில் சிலுவை என்றழைக்கப்பட்டது.

## வரலாற்றில் சிலுவை:

சிலுவை ஒரு தூக்கு மரம். அது முதன் முதலில் பொனீசியா (Phoenicia) நாட்டின் தீரு மாநகரில் கி.மு 325-இல் பயன்படுத்தப்பட்டது. பிறகு எகிப்து (Egypt)இ பாரசீகம் (Persia)இ கார்த்தேஜ் (Carthage), கிரேக்கம் (Greece), உரோமை (Rome) போன்ற நாடுகளிலும் பயன்படுத்தப்பட்டு வந்தது. உரோமை அரசில் குற்றம் செய்த அடிமைகளும், அரசுக்கு எதிராக புரட்சி செய்தவர்களும் சிலுவையில் தூக்கிலிடப்பட்டனர்; சிலுவையில் தூக்கப்படுதல் மிகவும் இழிவான தண்டனை என்று உரோமை அரசில் கருதப்பட்டது. இந்த மரண தண்டனை விதிக்கப்பட்டவர்கள் சிலுவையில் அறையப்பட்டு, பொதுமக்கள் பார்வையில் சாகும் வரை தொங்க விடப்பட வேண்டும். பார்ப்பவர்கள் அந்த நபர் செய்தக் குற்றத்தையும், அவரையும் நிந்தித்துத் தூஷிப்பார்கள். வரலாற்றில் + T X போன்ற வடிவங்களிலான

சிலுவைகளில் இயேசுவின் சீஷர்கள் உட்பட பல தொடக்ககால கிறிஸ்தவர்கள் அறையப்பட்டார்கள். இத்தகைய கொடிய சிலுவை மரணத்தை ஒழித்தவர் உரோமை கிறிஸ்தவ மன்னன் கான்ஸ்டன்டைன் (Constantine the Great). அவர் முதன்முதலில் வைரக்கற்கள் பதிக்கப்பட்ட தங்க சிலுவையைத் தமது மணிமுடியிலும், செங்கோலிலும் பதித்தார்.

## திருமறையில் சிலுவை:

சிலுவை என்னும் சொல் புதிய ஏற்பாட்டில் 83 முறை இடம் பெறுகிறது. சிலுவை, கிறிஸ்து தம்முடைய சிறந்த தன்மையைப் பொன் மொழிகளால் வெளிப்படுத்துவதற்கு ஒரு புதிய வாய்ப்பளித்தது. அதன் மூலம் சிலுவை சிறந்த அருளுரை மேடையாகவும் காட்சி தருகிறது. இயேசு, சிலுவையை உவமை பொருளாகவும் பயன்படுத்தினார் (லூக்கா: 9:23, 14:27). புதிய ஏற்பாட்டு காலத்தில் “சிலுவை சுமத்தல்” என்பது ஒரு வழக்குச் சொல்லாக இருந்தது. அச்சொல் அவமானம், பெருந்துன்பம் என்ற இரு பொருள்களை உணர்த்துகிறது. எனவேதான் தூய பவுல் கலாத்தியருக்கு எழுதிய நிருபத்தில் கிறிஸ்துவுக்காகத் துன்பத்தை ஏற்க விருப்பமற்றவர்கள் கிறிஸ்தவராய் இருக்க முடியாது என்கிறார். சிலுவை போதனை யூதர்களுக்கு ஒரு இடறல், கிரேக்கர்களுக்கு பைத்தியம், உரோமருக்கு அருவருப்பு. இவ்வாறு, அக்காலத்தில் இருந்த அனைத்து மக்களும் மகா அருவருப்பாய் நினைத்தச் சிலுவையைப் பரிசுத்த பவுல் அப்போஸ்தலன் மேன்மையாக எண்ணினார்; அவர் தனது மேன்மையெல்லாம் சிலுவையே என்று அறிக்கையிடுகிறார் (கலா: 6:14). முன்னே அவருக்கு கொடிய வெறுப்பும், அவமானமுமாய் தோன்றின சிலுவை இப்போது ஒப்பிடக்கூடாத மகிமையாய் விளங்கியது.

## சிலுவையில் வெளிப்பட்ட தேவ அன்பு:

யூதர், ரோமர், கிரேக்கர் முதலியோர் சிலுவையைத் தொட்டாலே தீட்டு என எண்ணினர்; பொதுவாக, அடிமைகள் மற்றும் சமுதாயத்தில் மிகவும் தாழ்த்தப்பட்டவர்களுக்கு தான் சிலுவை மரணம் வழங்கப்பட்டது. திருமுறையில் உபாகமம் 21: 23 இல் “தூக்கிப்போடப்பட்டவன் தேவனால் சபிக்கப்பட்டவன்” என்று சொல்லப்படும் சாபத்தின் கூற்றை, உலகின் மீது தான் வைத்திருந்தத் தூய அன்பால் மேன்மையாக மாற்றினார் இயேசு கிறிஸ்து. தன் மரண வேளையின் சமயத்தில் உலகின் மீது அவர் கொண்ட அன்பை வெளிப்படுத்தத் தவறவில்லை. அவைகளே சிலுவை மொழிகளாக வெளிப்பட்டு இன்றும் போற்றப்படுகின்றன. அன்று அருவருப்பின் அடையாளமாய் கருதப்பட்ட சிலுவை இன்று கிறிஸ்தவ சமயத்தின் புனித சின்னமாகதப் பார்க்கப்படுகிறது. இதற்கு காரணம் சாபமாய் கருதப்பட்டதைத் தொட்டு, தூக்கி தோளில் சுமந்து அதில்

அறையுண்ட இயேசு கிறிஸ்துவின் பாடு மரணமே. இன்று கிறிஸ்தவ ஆலயங்களிலும், இல்லங்களிலும், நிறுவனங்களிலும் சிலுவை காட்சி தருகிறது. அதை அணிகலன்களாகவும், அடையாளங்களாகவும் அணிந்துக் கொள்கிறோம். வெளித்தோற்றத்தில் மட்டுமல்ல உள்மனதில் சிலுவையைச் சுமந்த இயேசுவின் வார்த்தைகளை ஏற்றுக்கொண்டு, அதன்படி வாழ முயல்வதும் வாழ்ந்து காட்டுவதுமே இயேசுகிறிஸ்துவிற்கு, நாம் செலுத்தும் மனப்பூர்வமான காணிக்கையும், மரியாதையுமாகும்.

## தற்கால வாழ்வில் சிலுவை:




நியாயமின்றி துன்புறுத்தப்படும் போது அத்துன்பத்தைப் பொறுமையோடு சகித்தலும் சிலுவை சுமத்தலே. இயேசு கிறிஸ்து மரத்தினால் செய்யப்பட்ட சிலுவையை மட்டும் சுமக்கவில்லை. தன்னைப் பகைத்த மனிதர்களின் கூர்மையான வார்த்தைகள், பழிச் சொற்கள், நிந்தைகள், பரியாசங்கள் என மனதாலும், காயங்கள் என சரீரத்தாலும் பல சிலுவைகளைச் சுமந்தார். கிறிஸ்து வாழ்ந்து காட்டிய வழியில் வாழ்வை அமைத்துக் கொள்ள அழைக்கப்பட்டிருக்கும் நாமும் சமூகத்தின் கடைநிலையில் தவித்து கொண்டிருப்போருடன் நம்மை அடையாளப்படுத்திக் கொண்டு, அவர்கள் சுமக்கும் சிலுவையின் தன்மைகள் மற்றும் அதற்கான காரணங்களை உணர்ந்து அறிந்து அத்தகையோருக்குத் தோள் கொடுப்போமானால் நாமும் இயேசுவின் சிலுவைப் பாதையில் பயணிக்க முடியும். எனவே பிறர் சிலுவை சுமக்க நாமே காரணமாகாமல் அனைவரும் கடவுளின் படைப்பில் சமம் என்கிற சகோதர உணர்வு கொண்டு நம்மை போன்று அயலகத்தாரையும் நேசித்துப் பிறருக்குக் கொடுக்க வேண்டிய மதிப்பையும், மரியாதையும் சுயநலமின்றி கொடுப்போம். கிறிஸ்துவின் சாயலை சமூகத்தில் பிரதிபலிக்கச் செய்வோம். இதன்மூலம் மானுட வாழ்வில் சிலுவை சுமை அல்ல சுகமென உணர வழிவகுப்போம்.

# இயேசுவின் கைது



**சேவியர், சென்னை**

இயேசு இறுதி இரா உணவை சீடர்களோடு முடித்துவிட்டார். யூதாஸை அனுப்பிவிட்டார். இனிமேல் மரணத்தை நோக்கிய பயணம். மேல் அறையிலிருந்து கெத்சமனே நோக்கிய பயணத்தை இயேசு துவங்கினார். நகரின் கதவைக் கடந்து, பள்ளத்தாக்கில் நடந்து கெதரோன் நீரோடையைத் தாண்டி செல்ல வேண்டும். கெதரோன் நீரோடைக்கு ஒரு சிறப்பு உண்டு.

பாஸ்கா விழாவின் போது ஆடுகள் பலியிடப்படும் இல்லையா, அதன் இரத்தம் பலிபீடத்திலிருந்து வழிந்து தரையில் ஓடி ஒரு கட்டத்தில் கெதரோன் நீரோடையில் கலந்து விடும். அந்த அளவுக்கு அதிகமான பலியா நடக்கிறது என கேட்கலாம். கிபி 65ல் ஒரு கணக்கெடுப்பு நடத்தினார்கள். ஒரு பாஸ்கா விழாவில் எத்தனை ஆட்டுக்குட்டிகள் பலியிடப்படுகின்றன எனும் கணக்கு. கிடைத்த எண்ணிக்கை இரண்டு இலட்சத்து ஐம்பத்தாறாயிரம் ஆடுகள் என வியக்க வைக்கிறது. இதை வரலாற்று ஆய்வாளர் ஜோஸபஸ் பதிவு செய்திருக்கிறார்.

அத்தனை ஆடுகளின் இரத்தங்கள் பலிபீடம் கடந்து, தரையில் நடந்து , நீரோடையில் கலக்கின்றன. தானும் நாளை இதே போல் பலியாடாய் வெட்டப்படப் போகிறோம். தனது இரத்தமும் மண்ணில்

வழியப்போகிறது எனும் சிந்தனை இயேசுவின் மனதில் ஓடியிருக்கலாம். அவர்கள் அந்த நீரோடையைக் கடந்து கெத்சமெனே தோட்டத்திற்குச் செல்கிறார்கள். கெத்சமெனோ தோட்டத்தில் நிறைய தனியார் இடங்கள் உண்டு. இயேசு சென்ற இடம் தனியார் இடமாக இருந்திருக்கலாம் என்றும், தோட்ட உரிமையாளர் இயேசுவின் நண்பராக இருந்திருக்கலாம் என்றும், எருசலேம் வரும்போதெல்லாம் அதை அவர் பயன்படுத்தியிருக்கலாம் என்றும் ஆய்வாளர் பலர் கருதுகின்றனர். அதனால் தான் இயேசு மிகச் சரியாக எந்த இடத்தில் இருப்பார் என்பதை யூதாஸ் அறிந்து வைத்திருந்தான்.

படை வீரர்களும், தலைமைக்குருக்களும் பரிசேயரும் அனுப்பிய காவலர்களும் இயேசுவைக் கைதுசெய்ய இரவில் பந்தங்களோடும், விளக்குகளோடும், படைக்கலங்களோடும் வந்தார்கள். யூதாஸ் அவர்களை அழைத்துக் கொண்டு வந்திருந்தான். யூத வீரர்களும், ரோமை வீரர்களும் இணைந்து இயேசுவைப் பிடிக்க வந்திருந்தனர். எத்தனை பேர் வந்திருந்தார்கள் ?

ரோமப் படைவீரர்களைக் குறிக்க ஸ்பைரா எனும் வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. அதை மூன்று விதமாகப் புரிந்து கொள்ளலாம். பொதுவான பொருளில், அதன் கிரேக்க வார்த்தை கோஹோர்ட் என்பது. அதற்கு அறுநூறு படை வீரர்கள் என்று அர்த்தம் ! இரண்டாவதாக அது துணைப் படை என பொருள்கொள்ளலாம் அப்படியானால் ஆயிரம் படை வீரர்கள் என அர்த்தம். மிகவும் அரிதாக அது மேனிபில் எனும் வார்த்தையைக் குறிக்கும். அப்படியானால் 200 படை வீரர்கள் என்று அர்த்தம்.

எப்படிப்பார்த்தாலும் இயேசுவைப் பிடிக்க வந்த ரோமப் படை வீரர்கள் மட்டும் சுமார் 200 முதல் ஆயிரம் பேர் வரை! நிராயுதபாணியாய் நிற்கின்ற இயேசுவைப் பிடிக்க இத்தனை பெரிய படை என்பது வியப்பூட்டுகிறது. இவர்களோடு சேர்த்து மதவாதிகள், அவர்களின் படைகள் என்றெல்லாம் கூட்டினால் இன்னும் எக்கச்சக்கமான எண்ணிக்கை வரும். எப்படியும் இயேசுவைப் பிடித்தே ஆகவேண்டும். மாபெரும் சண்டை நடந்தால் கூட அடக்கவேண்டும் எனும் சிந்தனையில் இவர்கள் வந்திருப்பது தெளிவாகிறது

பாஸ்கா விழாவுக்காக எருசலேமுக்கு ஒவ்வொரு ஆண்டும் சுமார் 30 இலட்சம் பேர்வரை வருவார்கள். எனவே இன்றைய தினம் இயேசுவோடு எத்தனை பேர் இருப்பார்கள் என்று தெரியாததால், அதிக வீரர்களோடு பகைவர்கள் களமிறங்கியிருக்கலாம்.



வந்தவர்கள் பந்தங்களோடு வந்தார்கள் என்பதை சில ஆய்வாளர்கள் வியப்பாய் பதிவு செய்கிறார்கள். பாஸ்கா விழாக்காலம் என்பது முழு நிலாக் காலமாக இருந்தது. பகலைப் போல வெளிச்சம் இரவிலும் தெரியக்கூடிய அந்த நாளில் ஏன் பந்தம் ? இயேசு பாறை இடுக்குகளில் எங்கேனும் சென்று ஒளிந்தால் கூட கண்டுபிடிக்க வேண்டும் எனும் நோக்கத்தில் அதைக் கொண்டு வந்திருக்கலாம். ஆனால் இயேசுவோ தாமாகவே முன்வந்து, 'நானே இயேசு' என பிரகடனப் படுத்துகிறார். தான் மரணத்திற்குத் தயாராய் இருப்பதையும், தன்னால் சீடர்களுக்கு எந்தப் பிரச்சினையும் வரக்கூடாது என்பதையும், தனது மீட்பின் திட்டம் நிறைவேறவேண்டும் என்பதையும் இயேசு அந்தச் செயல் மூலம் வெளிப்படுத்துகிறார்.

அந்தப் பெரிய கூட்டத்தைக் கண்டும் கலங்காமல் பேதுரு வாளை எடுத்து தலைமைக்குருவின் ஊழியனைத் தாக்கி அவன் காதை வெட்டியது வியப்பு. மார்கு நற்செய்தியாளர் பேதுருவின் பெயரைக் குறிப்பிடவில்லை. காரணம் மார்க் நற்செய்தி பேதுருவின் உரைகளின் அடிப்படையில் அமைந்ததே. அந்த காலங்களில் பேதுருவின் பெயரைக் குறிப்பிடுவது ஆபத்தானது என மார்க் கருதியிருக்கலாம். ஆனால் சுமார் நாற்பது ஆண்டுகளுக்குப் பின் யோவான் தனது நற்செய்தியில்

பேதுருவின் பெயரைக் குறிப்பிடுகிறார். அப்போது சூழல் மாறிவிட்டிருந்தது !

இயேசுவை யூதாஸ் முத்தமிட்ட நிகழ்வு அன்பின் மீது பூசப்பட்ட துரோகத்தின் கறை. நான் ஒருவரை முத்தமிடுவேன் அவரே இயேசு என யூதாஸ் வீரர்களிடம் சொல்லியிருந்தான். ஃபிலேய்ன் philein எனும் அந்த வார்த்தைக்கு முத்தம் என்பது அர்த்தம். ஆனால் யூதாஸ் முத்தமிட்டபோது kataphilein கடாபிலேய்ன் எனும் வார்த்தை பயன்படுத்தப்படுகிறது. அதற்குக் காதலர்கள் இட்டுக் கொள்வதைப் போன்ற அன்யோன்யமான முத்தம், தொடர் முத்தம் என்று அர்த்தம். இயேசுவைக் காட்டிக்கொடுப்பது மட்டுமல்லாமல், பிடிக்க வருபவர்கள் பிடித்துக் கொள்ள ஏதுவாக நீண்ட முத்தத்தை யூதாஸ் கொடுத்திருக்கலாம். அந்த முத்தத்திற்குப் பின் யூதாஸ் காணாமல் போகிறான். இயேசுவைப் பிந்தொடரவும் இல்லை. இயேசுவின் விசாரணையைப் பார்க்க வரவும் இல்லை. அவனது வாழ்க்கை அவனால் முடித்து வைக்கப்படுகிறது.

**இயேசு கைதுசெய்யப்பட்ட நிகழ்வின் பின்னணியும், வீரியமும் நம்மை திடுக்கிட வைக்கின்றன !**



**பே**துருவின் இந்த மறுதலிப்பை கிறிஸ்தவர்கள் போதுமான அளவுக்கு விமர்சித்துவிட்டார்கள். அவர் கோழை என்பவர்களும் உண்டு. உண்மையில் பேதுருவின் மறுதலிப்புக் காரணம் அவரது துணிச்சல் தான். புதிராகத் தோன்றினாலும் அது தான் உண்மை. பேதுருவின் துணிச்சல் தான் அவரை தலைமைக்குருவின் வீட்டு முற்றம் வரைக்கும் கொண்டு வந்து சேர்த்தது. எல்லா சீடர்களும் பின்னங்கால் பிடரியில் பட ஓடி ஒளிகையில் பேதுரு மட்டும் இயேசுவைப் பின் தொடர்கிறார். எல்லோரும் ஓடினாலும் நான் பின் தொடர்வேன் எனும் அவரது வாக்கை அவர் பின்பற்றுகிறார்.

இன்னொரு வியப்பூட்டும் விஷயம் என்னவென்றால், கொஞ்சம் நேரத்துக்கு முன்னாடி தான் கெத்சமெனேவில் ஒரு பணியாளனின் காதை வாளெடுத்து வெட்டி வீசியிருந்தார். அவன் தலைமைக்குருவின் பணியாளன். தலைமைக்குருவின் பணியாளனின் காதை வெட்டி வீசிவிட்டு, அதே தலைமைக்குருவின் முற்றத்தில் வருமளவுக்கு அவர் துணிச்சல் கொண்டிருந்தார்.

# துணிச்சலான பேதுரு



சேவியர், சென்னை

அதே போல முதலில் வாசலில் அவரிடம் கேள்வி கேட்கப்படுகிறது. மறுதலிக்கிறார், ஆனாலும் நழுவிச் செல்லவில்லை. மீண்டும் வந்தமர்கிறார். மீண்டும் மறுதலிக்கிறார், எனினும் ஓடி விடவில்லை. தொடர்ந்து அங்கேயே இருக்கிறார். பேதுருவின் துணிச்சல் உண்மையிலேயே பிரமிப்பூட்டுகிறது. மற்ற சீடர்கள் யாரும் நெருங்கவே நினைக்காத இடத்தில் தான் பேதுருவின் தோல்வி நிகழ்கிறது என்பதே அவரது துணிச்சலுக்கான ஒரு சான்று தான்.

பேதுருவின் இந்த மறுதலிப்புக் களங்கத்தை யார் முதலில் வெளியே சொன்னது ? பேதுருவோடு வந்த சீடர் சொல்லியிருப்பாரோ என நாம் நினைக்கலாம். இல்லை, பேதுருவின் பலவீனத்தை வெளிப்படையாய் வெகு விரிவாக சொன்னது பேதுருவே தான். மார்க் நற்செய்தி நூல் தான் நற்செய்தி நூல்களில் முதலில் எழுதப்பட்டது. அது பேதுருவின் போதனைகளின் தொகுப்பு தான். அதில் தான் இந்த மறுதலிப்பு விளக்கமாய் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. எனவே இந்த நிகழ்வை பேதுரு அவமானமாய்க் கருதவில்லை, தனது பலவீனத்தையும் மன்னிக்க வல்லவர் இயேசு என்பதை உலகிற்குப் பறைசாற்ற விரும்புகிறார். அவர் நினைத்திருந்தால் மிக எளிதாக அந்தப் பகுதியை மறைத்திருக்க முடியும்.

இந்த நிகழ்வில் உள்ள இன்னொரு சுவாரஸ்யமான கேள்வி, பேதுருவோடு அங்கே சென்ற இன்னொரு சீடர் யார் என்பது தான் ! அவர் தலைமைக்குருவுக்கு நெருக்கமானவர் என்கிறது பைபிள். இயேசுவின் சீடர்கள் யாரும் தலைமைக்குருவுக்கு நெருக்கமானவர்களாய் இருக்க வாய்ப்பில்லை !

சில விவிலிய ஆய்வாளர்கள், அது அரிமத்தியா ஊரானாகிய யோசேப்புவாய் இருக்கலாம் என்கின்றனர். சிலர் நிக்கோதேமுவாக இருக்கலாம் என்கின்றனர். இருவருமே தலைமைக்குருவுக்கு மிக நெருக்கமானவர்கள். Sanhedrin சனகத்ரின் உறுப்பினர்கள். எனவே அவர்களை அங்கே எல்லோருக்கும் தெரிந்திருக்கும்.

இன்னும் சிலர் அது யூதாஸ் இஸ்காரியோத்தாக இருக்கலாம் என்கின்றனர். அவர் ஒற்றனாய் மாறியதால் தலைமைக்குருவுக்கு நெருக்கமானவனாய் மாறியிருக்கக் கூடும். ஆனால் முத்தத்தால் இயேசுவைக் காட்டிக் கொடுத்த யூதாஸோசு பேதுரு சென்றிருக்க வாய்ப்பு இல்லை என்பதே உண்மை.

மரபுச் செய்திப்படி பேதுருவோடு சென்றவர் யோவான். எனில், கலிலேயனாகிய மீனவன் யோவான் எப்படி தலைமைக்குருவுக்கு நெருங்கினவனானான் ? யோவானின் தந்தை அந்தக் காலத்தில் மிகவும் புகழ்பெற்ற பதப்படுத்தப்பட்ட மீன் விற்பனையாளராய் இருந்திருக்க வேண்டும், அதன் மூலம் அவர் தலைமைக்குருவுக்குப் பழக்கமானவராக இருந்திருக்கலாம் என்கிறார்கள் வரலாற்று ஆய்வாளர்கள்.



அதேபோல பேதுரு இயேசுவை மறுதலித்த முற்றம் இயேசு இருந்த இடத்திற்கு மிக அருகாமையில் இருந்திருக்கலாம் என்றும், பேதுரு இயேசுவை மறுதலித்ததை இயேசுவே கேட்டிருக்கலாம் என்றும் சில ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். அப்படியானால் அது பேதுருவின் உள்ளத்தை மிக அதிகமாய்க் காயப்படுத்தியிருக்கக் கூடும்.

யோவான் நற்செய்தி நூலில் அன்னாவின் முற்றத்தில் பேதுரு இயேசுவை மறுதலிப்பதாகவும், மற்ற நற்செய்தி நூல்களில் கயபாவின் முற்றத்தில் இயேசு மறுதலிப்பதாகவும் பதிவாகியிருக்கிறது. அப்படியானால் இரண்டு இடங்களிலும் பேதுரு மறுதலித்தாரா எனும் விடைதெரியாக் கேள்வியும் பரவலாய் உண்டு.

'நீ இயேசுவோடு இருந்தவன் தானே' எனும் சந்தேகக் கேள்விகள் மூன்று முறை கேட்கப்படுகின்றன. மூன்று முறையும் பேதுரு மறுப்பு தெரிவிக்கிறார். அப்போது சேவல் கூவிற்று !

இன்று சேவல் கூவும் முன் நீ என்னை மூன்று முறை மறுதலிப்பாய்” என இயேசு கூறியிருந்த வார்த்தைகளை பேதுரு நினைவு கூர்ந்தார். வெளியே சென்று மனம் கசிந்து அழுதார்.

ஐந்தறிவுள்ள சேவல், பேதுருவுக்கு தன்னுடைய பிழையை உணர்த்தியது என்பது தான் நாம் காலம்காலமாக நம்பி வருகின்ற செய்தி. அது பொய்யாக இருக்கலாம் என சில விவிலிய ஆய்வாளர்கள், உரையாளர்கள் நம்புகின்றனர்.

யூதர்களுடைய சடங்கின்படி புனித நகரத்தில் சேவலையோ, கோழியையோ வைத்திருக்கக் கூடாது. அப்படிப் பார்த்தால் இயேசுவின் விசாரணை நடந்த இடத்தைச் சுற்றி பல மைல் தூரத்துக்குச் சேவல்கள் இருந்திருக்கக் கூடாது. எனில் எங்கிருந்து அந்த சேவல் சத்தம் வந்தது ? என அவர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

இரண்டாவது, இயேசுவிடம் விசாரணை நடந்து கொண்டிருந்த காலம் நள்ளிரவு தாண்டிய பொழுது. விடிவதற்கு இன்னும் நிறைய நேரம் இருக்கின்ற ஒரு நேரம் அது. அந்த நேரத்தில் எப்படி சேவல் கூவியது என்பது இன்னொரு சந்தேகம் !

இதற்கான விளக்கத்தை சில விவிலிய உரையாளர்கள் தருகிறார்கள். ரோமர்கள் தங்களுடைய இரவுக் கண்காணிப்புப் ணிப்ப பணியை நான்காகப் பிரிக்கிறார்கள். மாலை 6 மணி. முதல் 9 மணி வரை முதல் குழு. ஒன்பது முதல் 12 மணிவரை அடுத்த குழு. 12 மணி முதல் மூன்று மணி வரை மூன்றாவது குழு. மூன்று மணி முதல் ஆறு மணி வரை நான்காவது குழு. மூன்றாவது கண்காணிப்புக் குழு பணியை முடித்துச் செல்லும் போது டிரம்பெட்/எக்காளம் ஊதுவார்கள். சரியாக அதிகாலை மூன்று மணிக்கு அந்த ஓசை எழுப்பப்படும்.

இலத்தீனில் gallicinium கல்லிஸினியம் என்றும் கிரேக்கத்தில் alektorophonia அலெக்டோரோஃபோனியா என்றும் அழைக்கப்படும் இந்த ஒலிக்கு சேவல்கூவுதல் என்று அர்த்தம். கேஸில் ஆஃப் அண்டோனியாவில் ஒலிக்கும் அந்த ஓசை நகர் முழுவதும் கேட்கும். இயேசு அந்த ஒலியை மனதில் வைத்து ‘சேவக் கூவும்’ சத்தம் வரும் முன், அதாவது அதிகாலை மூன்று மணிக்கு முன் நீ என்னை மூன்றுமுறை மறுதலிப்பாய் என்று கூறியிருக்கலாம் என்கின்றனர். அது உண்மையாய் இருக்கும் பட்சத்தில் பேதுருவின் மனசாட்சியைத் தட்டி எழுப்பியது உயிருள்ள சேவல் அல்ல, பணியாளர்களின் பணி மாற்றத்தின் கண்காணிப்பு ஒலி !

பேதுரு இயேசுவை மறுதலித்ததும், அதைச் சார்ந்த நிகழ்வுகளும் இப்படிப்பட்ட பல்வேறு வியப்பூட்டும் கேள்விகளால் நிரம்பியிருக்கிறது.

# கூடுதல் தகவல்கள்

Bro.மெர்லின்,
நல்ல நிலமாகு நண்பா

## காய்பா தற்கொலை.

இயேசுவின் மரணத்திற்கு 2- ஆண்டுகளுக்குப் பின் காய்பா மற்றும் பிலாத்து, சிரியாவின் ஆளுநர் 'விற்றெல்லியஸ்' (VITELLIUS)என்பவரால் பதவி நீக்கம் செய்யப்பட்டனர். காய்பா இந்த பணி நீக்கத்தின் அவமானத்தை தாங்கி கொள்ள முடியாமலும், கிறிஸ்துவை கொன்றதற்காக தன் மனசாட்சி உணர்த்தியதாலும் தன்னைத்தானே கொன்றதாக வரலாற்றாசிரியர் ஜோசிபியஸ் ( Josephus) விவரிக்கிறார் (கிபி. 35).

## அன்னா – வுக்கு அதிகாரம் உண்டா?

திருமறையின் படி ஒருவர் மட்டுமே பிரதான ஆசாரியராக இருக்க முடியும். இயேசுவின் விசாரணை காலத்தில் காய்பா பிரதான ஆசாரியராக இருந்தார் ( கிபி 26 முதல் 37 வரை). இப்படியிருக்க ஏன்? அன்னாவிடம் இயேசுவை விசாரணைக்கு கொண்டு சென்றார்கள்?

காய்பா அன்னாவின் மருமகன். அன்னா கிபி 7 முதல் கிபி 14 வரை பிரதான ஆசாரியனாக இருந்தவன்.அன்னா கொடுமையான மற்றும் வைராக்கியமுள்ள மனிதராக இருந்தவர். அவர் தன் பதவி காலத்தில் ஒருவனை கொன்றதால், கிபி 14-ல் சீரிய (Syria) ஆளுநரால் பிரதான ஆசாரியர் பதவியிலிருந்து பதவி நீக்கம் செய்யப்பட்டார். அன்னாவிற்கு பின் அவன் 5 மகன்கள் ஒன்றன் பின் ஒன்றாக பிரதான ஆசாரியர்களானார்கள், அதனைத் தொடர்ந்து காய்பா பிரதான ஆசாரியனாக்கப்பட்டார். ஆனால் இவர்கள் எல்லாருடைய காலத்திலும் அன்னா ஆதிக்கமிக்கவராகவே இருந்தார். திரை மறைவில் பிரதான ஆசாரியராக செயல்பட்டவர் அன்னா தான். மக்களும்,

சமயத்தலைவர்களும் அவரை பிரதான ஆசாரியரைப்போல்தான் தற்போதும் மதித்துக் கொண்டிருந்தனர். அதாவது தலைமைக் குருவாகத்தான் இருந்தார் என்று சொல்வதில் ஆச்சரியமில்லை. எனவேதான் இயேசுவை அன்னாவிடம் விசாரணைக்கு அழைத்துச் சென்றனர். அன்னாவின் சம்மதம் இல்லாமல் காய்பாவால் இயேசுவை ஒன்றும் செய்ய முடியாது.

## 30 வெள்ளிக்காசு

30 வெள்ளிக்காசு என்பது ஓர் அற்பத் தொகையே. அந்நாட்களின் 30 நாள் சம்பளம்தான் அது. 30 வெள்ளிக்காசு என்பது, ஒருவனுடைய எருது தற்செயலாக பக்கத்து வீட்டினரைத் தாக்கினால் அதற்கு ஈடாக கொடுக்க வேண்டிய தொகை ( யாத் 21:32). எங்கள் பார்வையில் இயேசுவின் மதிப்பு ஓர் எருமைக்கு இருக்கும் மதிப்புதான் என்பதை மறைமுகமாக சுட்டிக்காட்டவும், இயேசுவை அற்பமாய் எண்ணவுமே, பிரதான ஆசாரியர் மற்றும் தலைவர்கள் யூதாசுக்கு வெறும் 30 வெள்ளிக் காசை கொடுத்தது.

## வெள்ளி பணத்தை எறிதல்

திருமறையில் நாம் வாசிக்கும் போது யூதாஸ் 30 வெள்ளிக்காசை தேவாலயத்தில் தூக்கி எறிந்தான் என சொல்லப்படுகிறது ( மத் 27.5).

ஆனால் ஆழமாய் அறிய வேண்டியது அவன் ஆலயத்தில் எந்த பகுதிக்குச் சென்றான் என்பதே. கிரேக்க திருமறையில் தேவாலயத்தைக் குறிக்க இரண்டு பெயர்கள் வழங்கப்படுகின்றன. ஒன்று ஹிரோன் (hieron), இன்னொன்று நாஸ் (Naos) என்பது. இரண்டும் தேவாலயம் என்றுதான் அழைக்கப்படும் ஆனால் இரண்டும் தேவாலயத்தின் வித்தியாசமான பகுதிகளைக் குறிக்கும். உதாரணமாக ஹிரோன் என தேவாலயத்தைக் குறிப்பிடும் போது, அதில் புற ஜாதிகளின் மண்டபம், யூதர்களின் நீதிமன்றம், துணை நீதிமன்றம், தகன பலிபீடம், இவைகளெல்லாம் உள்ளடங்கும். ஆனால் நாஸ் என தேவாலயத்தைக் குறிப்பிடும் போது அது பரிசுத்த ஸ்தலத்தையும், மகா பரிசுத்த ஸ்தலத்தையும் மற்றும் ஆலயத்தின் புனித இடங்களை மட்டுமே குறிக்கும். இங்கு பிரதான ஆசாரியர் மற்றும் துணை ஆசாரியர்கள் மட்டுமே செல்ல முடியும். அதுவும் மகா பரிசுத்த ஸ்தலத்தில் பிரதான ஆசாரியர் மாத்திரமே செல்ல

முடியும், அதுவும் வருடத்திற்கு ஒரு முறை மட்டுமே.

மத்தேயு 27:5-ல் யூதாஸ் தேவாலயத்தில் பணத்தை தூக்கி எறிந்த சம்பவத்தில். கிரேக்க திருமறையில் தேவாலயத்திற்கு நாஸ் ( Naos) என்று போடப்பட்டிருக்கிறது. அப்படியானால் அவன் ஆசாரியர்கள் மட்டுமே போகக்கூடிய பகுதிக்கு சென்றிருக்கிறான். ஆனால் அங்கு வெளிப்புற பகுதிககளுக்கும்(hieron) ஆசாரியர்களின் பகுதிகளுக்கும் இடையேயான கதவு பூட்டப்பட்டிருந்ததால் அதற்கு மேல் செல்ல முடியாமல், அங்கிருந்து, அவன் ஆசாரியர்களை கோபத்துடன் கத்தி அழைத்து அவர்கள் மீது எறிந்தான்.

இயேசு கூட நாஸ் (Naos) பகுதிக்கு சென்றதில்லை. இயேசு எப்போதும் எருசலேம் ஆலயத்தின் ஹிரோன் பகுதியில்தான் உலாவி வந்தார். ஆனால் வெளிப்படுத்தின விசேஷத்தில் இயேசு தேவாலயத்தில் நாஸ் பகுதியில் இருப்பதாக சொல்லப்பட்டிருக்கிறது ( பரலோகில்).

## கெத்சமனே தோட்டம்.

எருசலேமில் எந்த அளவிலும் தோட்டங்கள் இல்லை, ஏனெனில் மலையின் உச்சியில் நகரம் இருந்ததால் முழுவதும் கட்டடங்க ளாகத்தான் இருந்திருக்கின்றன. எனவே ஒலிவ மலைச்சரிவுகளில் பணக்காரர்கள் தங்களுக்கென்று தனிப்பட்ட தோட்டங்களை உருவாக்கியிருந்தனர் அதில் ஒன்றுதான் கெத்சமனே தோட்டம்.

கெத்சமனே ( Gethsemane) என்ற வார்த்தையின் அர்த்தம் ‘ஆலிவ் வாட்’ (Olive - Vat) அல்லது ‘ஆலிவ் ப்ரஸ்’ (olive - Press). அதாவது ஒலிவ பழங்கள் அறுவடை செய்த பின் அது நசுக்கப்பட்டு, பிழியப்பட்டு, கொள்கலனில் சேமித்து வைக்க உதவும் ஓர் இயந்திர அமைப்பை குறிப்பதுதான் கெத்சமனே என்ற பெயர். அப்படியானால் இயேசு ஜெபித்த இடத்திலோ அல்லது அதன் அருகிலோ இந்த இயந்திர அமைப்பு இருந்ததால்தான் அந்த தோட்டம் கெத்சமனே தோட்டம் என அழைக்கப்பட்டது. எப்படியாயிருந்தாலும் இயேசு கிறிஸ்துவின் சதை நசுக்கப்பட்டு இரத்தம் பிழியப்படப் போகிறது என்பதைத்தான கெத்சமனே தோட்டம் அடையாளமாகக் காட்டுகிறது.

## இந்த பாத்திரம் (Cup) (மத் 26:39).

பாத்திரம் (Cup) என்பது, அக்கால சமய நூல்களில் துக்கம், வேதனை பயங்கரம், மரணம் ஆகியவற்றை சுட்டிக்காட்ட அடிக்கடி பயன்படுத்தப்பட்டிருக்கிறது. மிகவும் பழமையான காலங்களில் குற்றவாளிகளை தண்டிக்கும் குறிப்புகளில் இந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என யூகிக்கிறார்கள். சாக்ரடீஸ் ஏதேன்ஸ் - ல் ஒரு கோப்பை விஷம் கொடுத்துதான் கொல்லப்பட்டார் (கிமு 399). இயேசு நம் ஒவ்வொருவருக்காகவும் கோப்பையின் வழியாக மரணத்தை சுவைத்தார் (எபிரேயர் 2:9). நம்முடைய பாவங்கள் தான் அவருடைய கோப்பையில் விஷமாக ஊற்றப்பட்டது. அந்த விஷத்தைக் குடித்து ஒவ்வொரு மனிதனுடைய மரணத்தையும் அவர் அனுபவித்தார்.

## பேதுருவை வீரர்கள் ஒன்றும் செய்யவில்லை

உண்மையில் போர் வீரர்கள் சூழ்ந்திருக்க, பேதுரு ஒரு வேலைக்காரனின் காதை வெட்டும் போது, அதுவும் காய்பாவினுடைய வேலைக்காரன் காதை வெட்டும் போது, ஆயுதம் ஏந்திய வீரர்கள் பேதுருவை 100 துண்டுகளாக வெட்டியிருக்க வேண்டும் ஆனால் அவர்கள் பேதுருவின் நிழலைக் கூட தொடவில்லை? ஏன் ? பயம்! பயம்! பயம்!

அதற்கு சற்று முன்னர்தான் இயேசு தன்னை 'நான்'தான் என்று தைரியமாய் சொல்கையில், அத்தனை வீரர்களும் பின்னிட்டு விழுந்தார்கள் (யோவான் 18:5, 6). அதன் பின்னும் பேதுருவைத் தொட துணிவார்களா? உண்மையில் இயேசு இந்த இடத்தில் தன் வல்லமையை ஏன் காட்டினார் என்று ஆராயும் போது, ஒன்று நீங்கள் என்னை சிலுவைக்கு நேராக கொண்டு செல்ல வில்லை; நானாக விரும்பி வருகிறேன் என்பது. இரண்டாவது சீஷர்கள் மீது ஒருவன் கூட கை வைக்க கூடாது என்கிற மிரட்டலாகவும் அது இருந்தது.



## இயேசு ஏன் பதிலளித்தார்?

பிரதான ஆசாரியரின் விசாரணையில், இயேசு எந்த கேள்விக்கும் பதில் அளிக்காமல் மௌனமாகவே இருந்தார். இது பிரதான ஆசாரியருக்கு மிகுந்த கோபத்தை ஏற்படுத்தியது. அவனை அவமானப்படுத்துவது போலிருந்தது எனவே இயேசுவை பேச வைக்க ஒரு குறுக்கு வழியைக் கையாண்டான். அதற்காக அவன் கேள்வியை தான் கேட்பதாக கேட்காமல், அங்கு தேவன் பெயரை இழுக்கிறான்.

பழைய ஏற்பாட்டு முறைமையின் படி தேவன் பெயரில் ஒரு கேள்வியைக் கேட்டால் அவன் உண்மையான பதிலைச் சொல்ல வேண்டும் இல்லையானால் அது தேவனை அவமதிப்பதாகும் *(1 ராஜாக்கள் 22:16 "ராஜா அவனைப் (மிகாயா) பார்த்து: நீ கர்த்தருடைய நாமத்திலே உண்மையை அல்லாமல் வேறொன்றையும் என்னிடத்தில் சொல்லாதபடிக்கு, நான் எத்தனைதரம் உன்னை ஆணையிடுவிக்கவேண்டும் என்று சொன்னான்.")*. எனவேதான் இயேசு கிறிஸ்து பதில் சொல்லுகிறார்.

அதுவுமல்லாமல் அவன் கேள்வி " நீர் மேசியாவா" என்பதைப் பற்றியது. பல இடங்களில் தான் மேசியா என்பதை சொல்லாத ஆண்டவர் இப்பொழுது அதிகாரப்பூர்வமாக அறிவிக்கிறார்.

## பிலாத்து

யூத தலைவர்கள் இயேசுவை பிலாத்துவிடம் கொண்டு சென்று ஒரு சாதகமான தீர்ப்பை உடனே எதிர்பார்க்கலாம் என நினைத்தார்கள். காரணம் பிலாத்து ஓர் கொடூரமான இரக்கமற்ற மனிதனாகவே இருந்திருக்கிறான்.

யூத அறிஞரான பிலோ (Philo) பிலாத்தை இப்படியாக விவரிக்கிறார். "பிலாத்து என்றால் - ஊழல், அடாவடித்தனம், திமிர், கற்பழிப்பு, கொலை, கொடூரம், மனிதாபிமானமற்ற குணம், etc.,

மேலும் பிலாத்து பொதுவாக யூதர்களின் மத விஷயங்களில் தலையிட விரும்புவதில்லையாம். எனவேதான் இயேசுவை ரோம அரசனுக்கு எதிரானவராக அவனிடம் விவரிக்கிறார்கள்.

- அவர் ஒரு கலகக்காரர்.
- ரோம அரசுக்கு வரி செலுத்த வேண்டாம் என்றான்.
- தன்னை ராஜா என்றான்.
- ‘சீஷர்’ தான் (அப்போதைய ரோம பேரரசர்) எங்களுக்கு ராஜா என்றார்கள். (லூக்கா 23:1-3).

ஆனால், இயேசுவின் தோற்றத்திலும், பேச்சிலும் ராஜ குடும்பத்திற்கு எதிராக செயல்படுபவர் போல் இல்லாததை பிலாத்து புரிந்து கொண்டதால் அவன் இயேசுவை விசாரிப்பதில் அக்கறை காட்டவில்லை. எனவே வழக்கிலிருந்து தான் விலகவோ அல்லது இயேசுவை விடுவித்து வழக்கை முடிக்கவே விரும்பினான்.

## விசாரணையின் உரிமை மீறல்கள்.

சனஹெறின் (Sanhedrin) சங்கம் என்பது, பிரதான ஆசாரியன், வேதபாரகர், பரிசேயர், சதுசேயர் , மூப்பர்கள் என - 71 உறுப்பினர்களைக் கொண்ட யூத நீதிமன்ற அமைப்பு.

இந்த அமைப்பின் விதிப்படி இரவு நேர விசாரணை சட்ட விரோதமானது. யூத சட்டத்தின் படி விசாரணை பகலில் தொடங்கி பகலில் முடிக்கப்பட வேண்டும். எனவேதான், இவர்கள் இயேசுவுக்கு இரண்டு விசாரணை வைத்தார்கள். 1) அவர்களுக்கு சாதகமான விசாரணையை இரவிலும். 2) பகலில் நடந்த விசாரணை சட்டத்தை மதிப்பவர்களாக காட்ட ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு நாடகம் மட்டுமே.

யூத சட்டப்படி விசாரணை அதிகாரப்பூர்வ இடத்தில்தான் நடைபெற வேண்டும், அதுதான் செல்லுபடியாகும். யூத சட்டத்தின் படி பஸ்கா காலத்தில் குற்ற வழக்குகள் விசாரிக்க கூடாது. பஸ்கா காலத்தில் விடுதலை பண்ண மட்டுமே முடியும் ( பரபாஸ்). யூத சட்டப்படி மரண தண்டனை வழக்குகள் ஒரே நாளில் தீர்ப்பு வழங்க கூடாது. எதிர் தரப்பு வாதத்திற்கு ஒரு இரவு வரை காலம் கொடுக்கப்பட வேண்டும்.

யூத சட்டப்படி, இரண்டு சாட்சிகள் விசாரிக்கப்பட வேண்டும், இரண்டு பேரும் ஒருவருக்கொருவர் சற்றும் தொடர்பில்லாதவர்களாக இருக்க வேண்டும். யூத சட்டபடி பொய்சாட்சிகளுக்கு மரண தண்டனை, ஆனால் இயேசுவின் விசாரணையில் பொய்சாட்சிகள் மட்டுமே இருந்தது. இந்த சனஹெறின் சங்கத்திற்கு மரண தண்டனை நிறைவேற்றும் அதிகாரம் அக்காலத்தில் இல்லாதிருந்தது, எனவேதான் இயேசுவை பிலாத்துவினடத்தில் அனுப்பி வைத்தார்கள்.

# தூக்குக்கயிறு

சேவியர், சென்னை



நான் தான்
யூதாஸின்
துயர மரணத்துக்குத்
துணை போன
தூக்குக்கயிறு பேசுகிறேன்.

பிடி வெள்ளிக்கு
ஆசைப்பட்டு
விடி வெள்ளியைக்
காட்டிக் கொடுத்தான் யூதாஸ்

சுருக்குப் பையின்
சில்லறைச் சிணுங்கல்
அவனை
சுருக்குக் கயிறுக்கு
அழைத்து வந்தது

நான்
வருந்தினேன்

இயேசுவுக்கு
நெருக்கமாய் இருந்தவனின்
குரல்வளையை
நெரிக்க வேண்டுமே என
கவலைப்பட்டேன்.

அன்று யூதாஸ்
கடும் துயரத்தில்
மன அழுத்தத்தில்
என்னிடம் வந்தான்.

தவறிழைத்த தருணத்தைச்
சொல்லிச் சொல்லிக்
கண்ணீர் விட்டான்.

பழி பாவமில்லாதவரை
நான்
அழிவுக்கு அனுப்பி வைத்தேனே,
என கதறினான்.

காட்டிக் கொடுத்த
அந்த
கொடூர நிமிடத்திலும்
தோழா என்றழைத்து
தோழமை செய்தாரே, நான்
தீவினை செய்தேனே
என புலம்பினான்.

ஒருவன் என்னைக்
காட்டிக் கொடுப்பானென
சூசகமாய் உச்சரித்து
என்னை
எச்சரித்தாரே
என வருந்தினான்.

சில்லறைக்கு ஆசைப்பட்டுச்
சிங்கத்தைக்
கல்லறைக்கு அனுப்பிவிட்டேனே
என கலங்கினான்.

ஆலயத்துக்கு ஓடினான்.
தவறைத் திருத்த முடியுமா
என
கடைசி முயற்சி செய்தான்.

பணத்தை எண்ணிக்
கொடுத்தபோது
‘நான் பார்த்துக் கொள்கிறேன்’
என்றவர்கள்
திருப்பிக் கொடுத்தபோது
‘நீயே பார்த்துக் கொள்’
என்றார்களாம்.

ஆண்டவனை விற்ற பணத்தை
ஆண்டவன் அற்ற ஆலயத்தில்
வீசி விட்டு
வெறுங்கையாய் தான் வந்தான்
வெறுமையாய் வருந்தி வந்தான்

பணத்தால் வாங்கிய
பாவத்தை
பணத்தால் அழிக்க முடியாதென
அறிந்து கொண்டான்.

துருப்பிடித்த சிந்தனை கொண்ட
குருக்களும் அந்த
கறைபடிந்த காசை
இறை சமுகத்தில் வைக்க
அஞ்சினர்,

அந்நியரை அடக்கம் செய்ய
குயவன் நிலமொன்றை வாங்கினர்

நான்
யூதாஸின் கண்ணீரைக்
கண்டவன்.
அவனது குமுறலைக் கேட்டவன்.

‘அவரை எனக்குத் தெரியவே
தெரியாது’
என்ற பேதுரு
மனம் கசிந்து அழுதார்
மீண்டும் இயேசுவிடம் வந்தார்

‘அவரை எனக்குத் தெரியும்’
என முத்தமிட்ட யூதாஸ்
கலங்கினான்
ஆனால் இயேசுவை விட்டுவிட்டு
என்னிடம் வந்தான்.

நான்
உயிரைப் பறிப்பவன்
அவர்
உயிரைக் கொடுப்பவர்.

சிலுவையும்
தூக்குக் கயிறும்
உயிரைப் பறிக்கும்
கொலைக்கருவிகளே

ஒன்று
மீட்புக்கான பாலம்
இன்னொன்று
அழிவுக்கான பாலம்.





யூதாஸ்
இயேசுவுக்கு
மிக நெருக்கமாய் இருந்தான்
வெகு தூரமாய்
மாறிப் போனான் !

இயேசுவின் மரணம்
முற்றுப் புள்ளி என நினைத்தான்
அவரது
உயிர்ப்பின் மாட்சியை
நம்பிட மறுத்தான்.

வீழ்தல் மனித இயல்பு
மீள்தலே மனித மாண்பு
என்பதை
அவனுக்கு
நான் எப்படிப் புரிய வைப்பேன்.

வாழும் மரத்தை
நழுவ விட்ட அவன்,
என்னை ஒரு
பாழும் மரத்தில் கட்டினான் !

அவனது
துயரம் தளும்பும்
கழுத்துகளில் நான்
அழுத்தத் துவங்கினேன்.

தொலைவில்
சிலுவை மரம்
மீட்புக்காய்க் காத்திருந்தது.

யூதாஸ்
அழிவின் மரத்தில்
தனது
முடிவுரையை எழுதினான்.

‘அறியாமல் செய்கிறார்கள்’
என
கொலைகாரர்களைக் கூட
மன்னிக்கப் போகும் இயேசுவின்
மகத்துவ மனதை
யூதாஸ்
கடைசிக் கணம் வரை
புரிந்து கொள்ளவேயில்லை.

இல்லையேல்
காட்டிக் கொடுத்த தன்னையும்
கரம்
நீட்டி அணைப்பார் என
அவன் அறிந்திருப்பான்.

நான்
அவனது
உயிர் குடித்த
தூக்குக்கயிறு பேசுகிறேன்.





# முதலாம் வார்த்தை:

**அப்பொழுது இயேசு: பிதாவே இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே என்றார். லூக்கா:23:34**

Rev. J. Yaphase
Kanjikuzhi District Church,
Kanyakumari.

## மனிதா… நீ மன்னிப்பாயா ?

இயேசு நாதர் சிலுவையில் திருவாய் மொழிந்த முதலாவது திருமொழி மன்னிப்பின் மகத்துவதுத்தை மையப்படுத்துகிறது; இதனை நடைமுறைப்படுத்தும் போது கிறிஸ்துவின் நற்கந்தம் வீசுகிறது. மன்னிப்பதின் பல பரிமாணங்களைச் சிந்திப்போம்.

## 1.கிறிஸ்துவைப் போலாக என்ன செய்ய வேண்டும் ?

(கொலோசேயர் 3:13) இறைமக்கள் கிறிஸ்துவைப் போல வாழ்வதற்கு வாஞ்சை கொள்கிறார்கள். சில காலம் அதற்காக பிரயாசப்படுகிறார்கள். பின்னர் பலனின்றி சோர்வடைந்து, பின்வாங்கி முயற்சியை கைவிட்டு விடுகின்றனர். கிறிஸ்துவைப் போலாக ஒரு வழி இருக்கிறது. அதென்னவென்றால், கிறிஸ்துவைப் போல மன்னிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். எவரும் ஆரம்ப கல்வி கற்காமல் உயர்கல்வி படிக்க இயலாதது போல, கிறிஸ்துவைப் போல வாழ வேண்டுமானால், அடிப்படையான மன்னிக்கும் பண்பு மிகமிக அவசியமாகும். வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமானால், மன்னிக்க கற்றுக் கொள்ளாதவர்கள், மன்னிக்க மறுக்கிறார்கள் அவர்கள் ஒரு நாளும் ஒரு போதும் கிறிஸ்துவைப் போல வாழ முடியாது.

## 2. மன்னிப்பு என்பது என்ன?

(மத்.18:21) உலக சிந்தாந்தத்தின் படி மன்னிப்பு என்பது ‘விட்டுவிடுதல்’ அதாவது கடனை திரும்ப கேட்காமல் விட்டுவிடுவது, குற்றம் செய்தவரை தண்டியாமல் விட்டுவிடுவது. ஒருவரை எதிர்க்க முடியாமல் விட்டு விடுவதல்ல, மாறாக மனபூர்வமாக முதலிலேயே விட்டுவிடுதல் ஆகும். திருமறை காட்டும் மன்னிப்பு எள்பது, தவறிழைத்தவர்கள் மேலுள்ள பழிவாங்கும் எண்ணத்தை விட்டுவிட்டு, புண்பட்ட மனதின் காயங்களை ஆற்றி, திரும்பவும் அன்பு பாராட்டி, நல்லுறவை

புதுப்பித்துக் கொள்வதாகும். சிறுவயதில் சொன்ன வார்த்தைக்காக வைராக்கியத்துடன் ஒப்புரவாகமல் மன்னியாமல் இன்றும் பகையோடு வாழ்வதை கிறிஸ்து விரும்பவில்லை. கிறிஸ்து போதித்து வாழ்ந்து காட்டிய மன்னிப்பு வாழ்வு என்பது திரும்ப திரும்ப அன்பை சொரிந்து நல்லுறவை ஏற்படுத்துவதாகும்.

## 3. மன்னிப்பு எவ்வளவு முக்கியமானது ?

(மாற்கு 11:25) மனிதர்கள் என்னென்னமோ கற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இன்னமும் அடுத்திருப்பவரை முழு மனதோடு மன்னிக்க கற்றுக்கொள்ளவில்லை. மன்னிப்பு ஒரு அற்புதமான குணாதிசயம். அது பரலோகத்தின் முன்சுவை. மன்னிப்பில்லாத பட்சத்தில் பரலோக வாசல் மனுக்குலத்திற்கு அடைக்கப்பட்டிருக்கும். கிறிஸ்து சிலுவையில் மன்னித்தது -பாவிகளை பரலோகத்திற்கு கொண்டு வந்தது. Dr.William Harris சொல்லுகிறார், கோபம், பயம், எரிச்சல், வெறுப்பு இவற்றால் மனித இதயத்தின் நாடித்துடிப்பின் வேகம் அதிகரிக்கிறது. சுவாசிக்கும் வேகம் இரட்டிக்கிறது. கடுமையான மாரடைப்பு கடுங்கோபத்துடன் தொடர்புடையதாயிருக்கிறது. உள்ளத்தில் நெடுநாட்களாக குடிகொண்டிருந்து அவ்வப்போது வெளிப்படும் கோப எழுச்சிகள் இதயத்தையே பாதித்து விடுகின்றன. ஆனால் மன்னிப்போ – அமைதியையும் , உள்மன ஆற்றலையும், தருகிறது. மன்னிப்பு எவ்வளவு முக்கியமானது என்றால் அது

**இருளை - வெளிச்சமாக்கும்,**
**குழப்பத்தை - சமாதானமாக்கும்,**
**பயத்தை - விசுவாசமாக்கும**
**துக்கத்தை - சந்தோக்ஷமாக்கும்**
**பகையை - அன்பாக்கும்**
**வியாதியை - ஆரோக்கியமாக்கும்**
**பாவியை - பரிசுத்தனாக்கும்**
**நரகத்தை - பரலோகமாக்கும்**
**அவநம்பிக்கையை - திடநம்பிக்கையாக்கும்**

ஆகவே,மன்னிப்பின் மேன்மை உணர்ந்து மன்னிப்போம் .

## 4.பழிவாங்குதலும் மன்னிப்பும்

(லூக்கா 17:3). இயல்பாகவே இன்று பழிவாங்கும் எண்ணம் எல்லோர் மனதிலும் மிக ஆழமாக பதிந்துள்ளது. யாராவது தீங்கு செய்துவிட்டால் நம்மையறியாமலேயே எதிர்வினையாற்றும் எண்ணங்கள் உருவாகின்றன. கோபம் எப்படி பொங்கி வருகிறதோ அப்படியே

பழிவாங்கும் எண்ணமும் பொங்கி வருகிறது. இது நம் மனதையும் உள்ஆற்றலையும் பாதிக்கிறது என்பதை யாரும் சிந்திப்பதில்லை. பலரது மனநோய்க்கு இதுவே காரணமாகும். இன்று காணும் பெரும்பாலான சிறுவர் நிகழ்ச்சிகள், சினிமாக்கள், தொலைகாட்சி தொடர்கள், கதைகள் போன்றவை பழிவாங்கும் மனப்பான்மையையே அதிகமாக காட்டுகிறது.மன்னிப்பின் மேன்மையை வலியுறுத்தும் நிகழ்ச்சிகள், சினிமாக்கள், தொலைகாட்சி தொடர்கள், கதைகள் மிகமிக அரிதே. இதன் விளைவு தான் நாம் மன்னிக்க முடியாத எண்ணங்கள், நம் எதிர் செயல்கள், சிந்தனைகள்.

- நான் சண்டையை ஆரம்பிக்கவில்லையே
- என்ன பற்றி உனக்கு தெரியாது
- என்னால் மன்னிக்கவோ மறக்கவோ முடியாது
- நான் என்ன வந்தாலும் பார்த்துக்கலாம்
- யார் முதலாவது தவறு செய்தது
- நான் செத்தாலும் உன்னை விடமாட்டேன்

இவைகள் பழிவாங்கும் மனதின் பிரதிபலிப்புகள். மன்னித்தல்: இறைபண்பு, நல்லபழக்கம், அன்பின் செயல், உறவை வலுப்படுத்தும். ஆனால் பழிவாங்குதல் இவற்றிற்கு எதிரானது என்பதை மனதில் கொள்ளவேண்டும்.

## 5.கிறிஸ்துவைப் போல மன்னிப்போம்

(எபே.4:32, கொலோ.3:13, லூக்.23:34). மன்னிப்பு என்பது ஒரு உணர்ச்சியல்ல – ஒரு தெளிவு. நாம் அதை தெரிவு செய்ய வேண்டும். மற்றவர்களை மன்னிக்க வேண்டும் என்ற தீர்மானம், ஏழு முறை மட்டுமல்ல, ஏழெழுபது முறை மன்னிக்க வேண்டும் என்பதற்கு அளவே இல்லை, எப்போதும் மன்னிக்க வேண்டும்; மன்னிப்புக்கு அளவீடு கிடையாது. மன்னிப்பு முழுமையானது அரை குறை கிடையாது. கடவுள் நம்மை மன்னித்தது போல நாமும் மற்றவர்களை மன்னிக்க வேண்டும். நாம் ஒருவரை நிபந்தனையின்றி மன்னித்தால்தான், பிறரிடம் மன்னிப்பை எதிர்பார்க்க முடியும். உளவியலாளரின் கூற்றுபடி, 'மக்களை மகிழ்ச்சியாக்குவது செல்வமல்ல – நல்ல நண்பர்களும் மன்னிக்கும் தன்மையுமே!' தங்கள் தவறுகளை உணராதவர்கள் மட்டுமே பிறரை மன்னிக்க மறுப்பார்கள்.

அன்பானவர்களே! கடவுள் நம்மை மன்னித்திருக்கிறார் என்பதை உணர்ந்து கொண்டால் பிறரை மன்னிக்க முடியுமே! மத். 6:14,15 – ன் படி மன்னிப்பார்க்கே மன்னிப்பு. மன்னிக்க முடியாத குணமிருப்பவர்கள், ஒரு முறை சிலுவையில் தொங்கிய, யேசுவை நினைத்து, 'பிதாவே இவர்களுக்கு மன்னியும்' என்ற வார்த்தையை கேட்டால் உங்கள் கோபமும், மன்னிக்க முடியாத குணமும் மாற்றுருவாக்கம் பெறும். உங்களுக்கு துன்பம் தந்த, ஒருவரிடம் இன்று "கிறிஸ்து எனக்கு மன்னித்ததைப் போல, நானும் உங்களை மன்னிக்கிறேன் " என்பீர்களா ? ●

# இரண்டாம் வார்த்தை:

**இயேசு அவனை நோக்கி: இன்றைக்கு நீ என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார். லூக்கா:23:43.**

Rev. Libin Raj
Kannanoor Church,
CSI, Kanyakumari.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கல்வாரி சிலுவையில் மொழிந்த இரண்டாவது வார்த்தையின் ஆழங்களை உங்களோடு பகிர்ந்துக் கொள்ளுவதிலே மகிழ்ச்சியடைகிறேன்.

லூக்கா நற்செய்தி நூல் 23:32-43 வரையுள்ள அந்த பகுதியை நாம் புரிந்து கொண்டால்தான் இந்த இரண்டாம் சிலுவை வார்த்தையை நம்மால் சரியாய் அறிந்துக் கொள்ள முடியும்; ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து ஆறுமணி நேரம் கல்வாரி சிலுவையிலே நமக்காக அடிக்கப்பட்டவராய் நொறுக்கப்பட்டவராய் இரத்தம் சிந்தினவராய் சிலுவையிலே தொங்கிக்கொண்டிருக்கின்ற அந்த ஆறுமணி நேரத்தில் ஏழு முறை ஆண்டவர் பேசுகிறார்.

அப்படி ஏழு முறை பேசிய ஆண்டவர் இரண்டாவதாக பேசிய வார்த்தை தான் 'இன்றைக்கு நீ என்னுடனே கூட பரதீசில் இருப்பாய்,' இந்த வார்த்தை ஆண்டவர் யாரோடு பேசினார் என்று அறிந்து கொள்வதற்கு 32ம் வசனம் 33ம் வசனத்தை நாம் படிக்கின்ற வேளையிலே ஆண்டவர் பேசியது குற்றவாளிகளிலே ஒருவன் (Criminals) என்று சொல்லி இந்த லூக்கா ஆசிரியர் குறிப்பிடுகின்றார். ஆனால் மத்தேயு ஆசிரியர் மாற்கு ஆசிரியரோ இவர்களை எப்படி குறிப்பிடுகிறார்கள் என்றால் கள்ளர்கள் (Rebels) என்கின்றார் (மத்தேயு 27:38, மாற்கு 15:27).

## குற்றவாளிகள், கள்ளர்கள் யார்?

ஆயுதம் தரித்துக் கொண்டு கொள்ளையிடுபவர்கள், காயப்படுத்தி மனிதர்களைக் கொலை செய்பவர்கள். ஆகவே, நீதி மன்றத்தாலே குற்றம் நிருபிக்கப்பட்டு மரணதண்டனை விதிக்கப்பட்டவர்களில்

ஒருவனோடு தான் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இந்த வார்த்தையைப் பேசுகிறார். குற்றம் விதிக்கப்பட்டு மரணதண்டனை விதிக்கப்பட்ட இரண்டு குற்றவாளிகள் நடுவிலே, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து குற்றம் நிரூபிக்கப்படாதவராய் மரண தண்டனை விதிக்கப்பட்டு, கல்வாரி சிலுவையிலே தொங்கிக்கொண்டிருக்கிறார்; இது தற்செயலாய் நடைபெற்ற நிகழ்ச்சி அல்ல ஏசாயா தீர்க்கதரிசியின் புத்தகம் 53:12-லே 700 ஆண்டுகளுக்கு முன்னதாக சர்வவல்லமையுள்ள கடவுள் தீர்க்கதரிசிகள் வழியாக முன்குறித்த நிகழ்ச்சியின் நிறைவேறுதல் தான் இது.

அந்த வசனம் இப்படியாக சொல்லுகிறது "அவர் தம்முடைய ஆத்துமாவை மரணத்திலூற்றி, அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டார்." ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு தெரியும் இரண்டு குற்றவாளிகள் நடுவிலே நான் தொங்கிக்கொண்டிருப்பது என்பது 'கடவுளின் திட்டம்' ஏனென்றால் லூக்கா நற்செய்தி நூல் 22ம் அதிகாரம் 37ம் வசனத்திலே ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இதை சொல்லுகின்றார். அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டார் என்று எழுதியிருக்கிற வாக்கியம் என்னிடத்தில் நிறைவேற வேண்டியதென்று உங்களுக்குச் சொல்லுகிறேன். என்னைப் பற்றிய காரியங்கள் முடிவு பெறும் காலம் வந்திருக்கின்றது. ஆகவே ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு தெரியும். அனைத்தும் சர்வவல்லவருடைய பிதாவாகிய கடவுளின் திருவுள சித்தத்தின்படி தான் இவைகள் நிறைவேறி கொண்டிருக்கிறதென்று சொல்லி, ஆகவே ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இந்த வார்த்தையைப் பேசியது குற்றவாளிகளில் அல்லது கள்ளர்கள் ஒருவரிடத்திலே பேசுகின்றார்.

அடுத்து பேசப்பட்ட சூழ்நிலையைச் சிந்திக்கின்ற வேளையிலே, 34ம் வசனத்திலிருந்து 42ம் வசனம் வரைபடிக்கின்ற வேளையிலே அந்த சூழ்நிலைமையை நம்மால் புரிந்துக் கொள்ளமுடியும். இந்த வார்த்தையை இயேசு கிறிஸ்து பேசுகின்ற சூழ்நிலைமையை முதல் வார்த்தையை பேசி முடித்த பிற்பாடு 34ம் வசனம் சொல்லுகிறது; அப்பொழுது இயேசு "பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே" என்றார். யாருக்காக ஜெபிக்கின்றார்? யாருக்காக பரிந்து பேசுகின்றார்? யார் மன்னிக்கப்பட வேண்டுமென்று விரும்புகின்றார்? தன்னை உபத்திரவப்படுத்துகிறவர்கள்; சரீர வேதனைக் கொடுக்கிற மனிதர்கள் அங்கே நின்று கொண்டிருக்கின்ற யூத தலைவர்கள், ரோம படை வீரர்கள் சாட்டையால் அடித்தவர்களுக்காய், எள்ளி நகையாடியவர்களுக்காய், பிதாவே, இவர்களுக்கு மன்னியும் என்று

சொல்லி ஜெபிக்கின்றார். வாரண்ஸ் R.N.W. என்ற இறையியலாளர் இந்த வார்த்தைக்கு அழகான விளக்கத்தைக் கொடுக்கின்றார். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பிதாவே என்று அழைத்து, மன்னியும் என்று சொன்னது ஒரு முறை அல்ல, ஒவ்வொரு துன்பங்களின் சூழ்நிலைகளிலும் பேசிக்கொண்டேயிருந்தார்.

நம்முடைய தலைவராகிய இயேசு கிறிஸ்து நமக்கு முன்மாதிரி (Jesus Christ is our model). நம்மை குற்றப்படுத்துகிறவர்களுக்காய், காயப்படுத்துகிறவர்களுக்காய், உபத்திரவப்படுகிறவர்களுக்காய் நம்மால் ஜெபிக்க முடிகிறதா? நம்மால் ஜெபிக்க முடிந்தால், நம்மால் மன்னிக்க முடிந்தால் நம்மிடத்திலே கிறிஸ்துவைப் போலான இயல்பு (Christ like nature) இருக்கிறது. நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவினுடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றுகிறோம் என்பதை நம்மால் புரிந்துக் கொள்ளமுடியும்.

அன்புக்குரியவர்களே, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தன்னைக் காயப்படுத்தியவர்களுக்காய், தன்னைக் குற்றப்படுத்தியவர்களுக்காய், தன்னை வேதனைப்படுத்தியவர்களுக்காய் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகின்றார், இது ஒரு சூழ்நிலைமை.

இரண்டாவது சூழ்நிலை என்னவென்றால் 35ம் வசனத்திலிருந்து 36ம் வசனம் வரை படிக்கின்ற வேளையிலே அங்கே திரள் கூட்டமான மக்கள் நிற்கிறார்கள். அந்த கூட்டத்திலே நிற்கிற மக்களின் மனநிலை எப்படி இருக்கிறது. ஜனங்கள் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அதிகாரிகள் இகழ்ந்து பேசுகிறார்கள்.

போர்ச்சேவகர்கள் காடியைக் கொடுத்து இகழ்ந்து பேசுகிறார்கள். இந்த கல்வாரி சிலுவையிலே ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவோடு இரண்டு குற்றவாளிகளும் அல்லது கள்ளர்களும் இகழ்ந்து பேசுகிறார்கள்.

லூக்கா நற்செய்தி ஆசிரியர் சொல்லுகின்ற போது ஒருவர் இகழ்ந்து பேசுகிறான். குற்றவாளிகளிலே ஒருவன் இகழ்ந்து பேசுகிறான் என்று சொல்லுகின்றார். ஆனால் மத்தேயு மற்றும் மாற்கு ஆசிரியரும் சொல்லுகின்ற போது, இரண்டு குற்றவாளிகளும் அங்கே நின்ற சமய தலைவர்கள் போர்ச்சேவகர்களோடு இணைந்து அவர்களும் இகழ்ந்து பேசினார்கள் என்று அவர்கள் சொல்லுகிறார்கள்.

மத்தேயு நற்செய்தி நூல் 27ம் அதிகாரம் 44ம் வசனத்திலே

அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்ட கள்ளரும் அந்தப்படியே அவரை நிந்தித்தார்கள். மாற்கு ஆசிரியர் சொல்லுகின்றார் மாற்கு 15:32ம்; வசனத்திலே அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்ட அந்தப்படியே அவரை நிந்தித்தார்கள். இந்த நிந்தனைகள் என்ன? இகழ்ச்சி என்ன? இகழ்ந்து பேசிய வார்த்தைகள் என்ன? என்பதும் அங்கே சொல்லப்பட்டிருக்கிறது.

இவர் யுதருடைய ராஜா என்று ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கல்வாரி சிலுவைக்கு மேலே அவருடைய குற்றம் எழுத வேண்டிய இடத்திலே எந்த குற்றமும் கண்டுபிடிக்க முடியாத காரணத்தினால் அவரை பரிகசிப்பதற்காக அவரை இகழ்ந்து பேசுவதற்காகவே இதை எழுதினார்கள், மாற்ற நினைத்தார்கள் ஆனால் பிலாத்து அதை மாற்ற அனுமதிக்கவில்லை, எழுதினது எழுதினது தான் என்றார். ஆகவே அந்த பலகை கல்வாரி சிலுவைக்கு மேலே இருக்கிறது என்று சொல்லி சொல்லி இகழ்ந்து பேசுகிறார்கள் பரிகசிக்கிறார்கள்.

அடுத்த இகழ்ச்சி அல்லது பரிகாசம் என்னவென்றால் இவன் மற்றவர்களை இரட்சித்தான் கிறிஸ்துவானால் தன்னைத்தான் இரட்சித்துக் கொள்ளட்டும்இ உன்னையும் எங்களையும் இரட்சித்துக் கொள் என்று பலவிதமான இகழ்ச்சிகள்.

'நீ கிறிஸ்துவானால்' 'நீ தேவனுடைய குமாரனானால்' நீ மற்றவர்களை இரட்சித்த மனிதனானால், இது போன்ற வார்த்தைகள் சத்துருவான சாத்தானால் வெளிப்படுத்தப்படுகின்ற வார்த்தைகள். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவினுடைய முதல் சோதனைகளிலே சத்துருவான சாத்தான் இப்படி தான் வந்து சோதித்தான். நீ தேவனுடைய குமாரனானால், நீ கிறிஸ்துவானால் கல்லுகளை அப்பங்களாக மாற்றும், தாழ குதியும், இது போன்ற வார்த்தைகள் எல்லாம் சாத்தானுடைய வார்த்தைகள். ஆனால், இரண்டு கள்ளர்களுடைய மனநிலையும் பாருங்கள்; இரண்டு குற்றவாளிகளுடைய மனநிலையும் பாருங்கள்; வேதனையின் மத்தியில் அவர்களும் கல்வாரி சிலுவையில் தொங்கி கொண்டிருக்கின்ற கடினமான சூழ்நிலைமையிலும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைத் தூஷிக்கிறார்கள். அவர்களுடைய அந்த இருதய கடினம் என்பது எவ்வளவு கொடூரமானது; இயேசு யாரென்று தெரியாது அங்கே நிற்பவர்கள் சொன்னதைக் கேட்டு அவர்கள் இகழ்வதைக் கேட்டு அவர்களும் தூஷிக்கிறார்கள்.

ஏன் இயேசு கிறிஸ்து இறங்கி வரவில்லை, அவரால் முடியாத

காரியமா? ஆம்! கல்வாரி சிலுவையிலிருந்து அவரால் இறங்கி வரமுடியாதா? அதற்குரிய ஆற்றல் இல்லையா? அதற்குரிய சக்தி இல்லையா? அவர் நினைத்திருந்தால் அந்த இடத்திலே சிலுவையிலிருந்து இறங்கி வந்திருக்க முடியும். அங்கே நின்ற மனிதர்களையெல்லாம் பொசுக்கி விடமுடியும். ஏனென்றால் 'அவர் கடவுள்'(He is God). ஆனால் ஏன் அந்த இகழ்ச்சியின் நேரத்திலும் சிலுவையிலிருந்து இறங்கி வரவில்லையென்றால் என்னையும் உங்களையும் இரட்சிப்பதற்காக, என்னையும் உங்களையும் மீட்பதற்காக. அது தான் ஆண்டவருடைய அன்பு அளவிடமுடியாத அன்பு. இன்றும் இதிலே பங்கெடுக்கிற அத்தனை பிள்ளைகளையும் இரட்சிப்பதற்காக ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அந்த நேரத்திலே கல்வாரி சிலுவையிலிருந்து இறங்கி வரவில்லை. அவர் கல்வாரி சிலுவையிலே தொங்கி கொண்டிருக்கின்றார்.

அன்புக்குரியவர்களே இந்த வார்த்தையை வாசித்துக் கொண்டிருக்கிற சகோதர சகோதரிகளேஇ ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து விண்ணுலக மேன்மைகளை விட்டு மண்ணுலகிலே பாலகனாய் பிறந்ததும் கல்வாரி சிலுவையிலே அவர் அடிக்கப்பட்டதும், நொறுக்கப்பட்டதும, திருரத்தம் சிந்தினதும், ஏதோ பணக்காரர்களாய் மாற்றுவதற்காக அல்ல, நாம் எத்தனை கோடி கொடுத்தாலும் எத்தனை லட்சம் செலவிட்டாலும் எங்கும் வாங்க முடியாத விலையேற பெற்ற இரட்சிப்பை தருவதற்காக நித்திய ஜீவனைத் தருவதற்காக நிலையான வாழ்வை நமக்கு அருளி செய்வதற்காக, நாம் அவியாத அக்கினியில் அவிழ்ந்து போகாமலிருப்பதற்காக.

அன்புக்குரியவர்களே இந்த சூழ்நிலைமையிலே ஒருவன் மட்டும் பரதீசியின் பாக்கியத்தைப் பெற்று கொள்ளுகிறான். ஏன்? எப்படி? என்பதை 39ம் வசனத்திலிருந்து 43ம் வசனம் வரை படிக்கின்ற வேளையிலே புரிந்துக் கொள்ளமுடியும். நின்ற எல்லா மனிதருக்கும் ஒரே வாய்ப்பு கொடுக்கப்படுகிறது. ஆனால் ஒரே ஒருவன் மட்டும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை இந்த சூழ்நிலைமையிலே கண்டு கொள்ளுகிறான். அவனுக்குள் மட்டும் மாற்றம் வந்தது. அவனுக்குள்ளே பயங்கரமான மாற்றம் (Transfermation) நடைபெற்றது. இந்த மாற்றம் அவனுக்குள் வருவதற்கான காரணம் என்ன? பலநிலைகளில் நாம் சிந்தித்து அறிந்துக் கொள்ள முடியும். ஒரு வேளை அந்த முதல் வார்த்தையைக் கேட்ட அவனுக்கு அவனுக்குள் மாற்றம் ஏற்பட்டிருக்கலாம். பிதாவே என்று அழைத்துப் பேசுகிறார். அப்படியானால் அந்த சர்வவல்லமையுள்ள பிதாவிற்கு இவர் குமாரன் என்பதை அறிந்ததினிமித்தமாக மாற்றம் வந்திருக்கலாம். பொதுவாக்

கல்வாரி சிலுவையில் தொங்குகிறவர்கள் தங்களைக் காயப்படத்துகிறவர்களைக் பார்த்து சாப வார்த்தைகளைப் பேசுவார்கள். ஆனால் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மன்னியும் மன்னியும் என்று பேசுகிறார். அதை கேட்ட வேளையிலே அவன் உள்ளத்திலே ஒரு வேளை மாற்றங்கள் ஏற்பட ஆரம்பித்திருக்கலாம். அவருடைய முகத்தைப் பார்த்து அவன் மனநிலைகளிலே மாற்றம் ஏற்பட்டிருக்கலாம். இச்சூழலிலும் மன்னிப்பை வெளிப்படுத்துகிறார் என்றால் இவர் நிச்சயம் மேசியாவாகத்தான் இருக்க முடியும் என உணர்கிறான். அங்கே நின்ற ரோமர்கள், தலைவர்கள் புரிந்துக் கொள்ளாததை இந்த குற்றவாளி புரிந்துக் கொள்கிறான். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை அவன் அறிந்து கொள்கிறான். இது உன்னதமான ஆசீர்வாதம் என்று உணர்ந்துக் கொண்டான். அப்படி உணர்ந்துக் கொண்ட தருணத்திலே மரணத்திற்கு பிற்பாடு வாழ்வு உண்டு என்பதை இந்த குற்றவாளி அல்லது கள்வன் புரிந்துக் கொள்கிறான். இயேசு கிறிஸ்து கல்வாரி சிலுவையிலே மரித்தாலும் நிச்சயமாக பிழைப்பார் என்பதை அவன் அறிந்து கொள்கிறான்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் கரத்திலே என்னை ஒப்புக்கொடுத்தால்இ எனக்கும் வாழ்வு உண்டு என்பதை அவன் புரிந்துக் கொள்கிறான். அந்த மனிதன் தான் பாவி என்பதைப் புரிந்துக் கொண்டு தன் பாவத்தை அறிக்கையிட்டான். அறிக்கையிட்டவன் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை நோக்கி ஆண்டவரே என்று அழைக்கிறான். இது வரையிலும்; ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் காதிலே விழுந்த வார்த்தைகள் இகழ்ச்சி அசுத்தம் கேவலமான வார்த்தை, ஆனால் இப்போது 'ஆண்டவரே' என்று அந்த கள்வன் அழைக்கிற வார்த்தை அதிலே இனிமையாய் தேனாய் பாய்ந்த ஒரு வார்த்தையாய் இருந்திருக்கலாம். அழைத்தவன் அப்படியே நின்று விடாமல் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவினிடத்திலே விண்ணப்பம் செய்கிறான். என்ன ஜெபம் என்றால் 'நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும் போது அடியேனை நினைத்தருளும்' இந்த ஜெபம் நம்மை அநேகமாய் சிந்திக்கத் தூண்டுகிறது அந்த கல்வாரி சிலுவையிலே வலிகளின் மத்தியிலே வேதனைகளின் மத்தியிலே அவனுடைய ஜெபம் உம்முடைய ராஜ்யத்தில் வருகையிலே அடியேனை நினைத்தருளும்.

ஆண்டவரே என் வலிகளைத் தீரும் என் வேதனைகளைத் தீரும் என்று சொல்லி ஜெபிக்கவில்லை. ஆண்டவரே என்னைக் கல்வாரியிலிருந்து இறக்கிவிடும் என்று ஜெபிக்கவில்லை. குடும்பம் பிள்ளைகளோடு நன்றாய் வாழவேண்டும் என்று கூட ஜெபிக்கவில்லை. உம்முடைய ராஜ்யத்திலே என்னை நினைத்தருளும் என்று

ஜெபிக்கிறான். உலகத்தின் ஆசீர்வாதத்திற்காக அவன் ஜெபிக்கவில்லை. இரட்சிப்பின் வாழ்க்கை வேண்டும் என்பதற்காக ஆண்டவருடைய சமுகத்திலே ஜெபிக்கிறான், ஜெபித்தவன் சாதாரணமாய் ஜெபிக்கவில்லை, விசுவாசத்தோடு ஜெபிக்கிறான், நீர் வருவீரானால் நினைத்தருளும் அல்லது நீர் வந்தால் நினைத்தருளும் என்று அவிசுவாசத்தோடு ஜெபிக்கவில்லை. நீர் வருவீர் என்பதை நிச்சயமாய் நம்பினவன் வரும் போது என்னை நினைத்தருளும். அவன் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவினிடத்திலே கொண்ட ஆழமான உறுதியான விசுவாசம் என்பது இந்த சூழ்நிலைமையிலே என்று சிந்தித்து பார்க்கின்ற வேளையிலே அது ஆழமான அர்த்தங்களை நமக்கு கற்றுத் தருகிறது.

அங்கே நின்ற எல்லா மனிதர்களும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை கண்டார்கள். அவர் பேசினதைக் கேட்டார்கள். ஆனால் பரதீசியின் பாக்கியத்தைப் பெற்றுக் கொண்டவனோ ஒரே ஒரு மனிதன். அங்கே இயேசுவை கண்டதினாலோ அவர் பேசினதைக் கேட்டதினாலோ எல்லாரும் பரதீசிக்கு போகமுடியாது. இரட்சிப்பை பெற்ற மனிதனால் மட்டுமே போக முடியும். அந்த மனிதன் தன்னுடைய பாவத்தை உணர்ந்து அறிக்கை செய்து ஆண்டவரே என்று சொல்லி விசுவாசத்தோடு ஜெபித்த வேளையில் அவன் பாவி என்று சொல்லி ஆண்டவர் அவரை பார்த்து கேட்கவில்லை. என்னிடத்தில் வருகிறவர்களை புறம்பே தள்ளமாட்டேன் என்று சொன்ன ஆண்டவர் இயேசு கிறிஸ்து ஏற்றுக்கொண்டார். இரட்சிப்பைக் கொடுத்தார். பரதீசியின் பாக்கியத்தைக் கொடுத்தார்.

இரட்சிப்பு என்பது என்ன? விசுவாசத்தைக் கொண்டு கிருபையினால் பெற்றுக் கொள்வது தான் இரட்சிப்பு எபே.2:8,9. இரட்சிப்பு என்பது நமது கிரியையினாலே அல்ல விசுவாசத்தைக் கொண்டு; கர்த்தருடைய கிருபையினால் இரட்சிக்கப்பட்டவனுக்கு அதற்கேற்ற கிரியை வேண்டும். இங்கே இரட்சிக்கப்பட்ட குற்றவாளி இரட்சிக்கப்பட்ட கள்வன் பரதீசியிலே ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு சீஷனாய் இருக்கும் பாக்கியத்தைப் பெற்றுக் கொண்டான். பரதீசு என்பது மரித்த உடனே ஓய்வு எடுப்பதற்காக செல்லுகின்ற இடம் தான் பரதீசு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சிலுவையிலே தன்னுடைய ஜீவனை கொடுத்த அந்த நேரத்திலிருந்து அவர் உயிர்தெழும் நேரம் வரையிலும் அவர் இருந்த இடம் பரதீசு. அந்த பரதீசுலே இயேசு கிறிஸ்துவோடு சீஷனாயிருக்கும் பாக்கியத்தைப் பெற்றான்.

பேச்சு வழக்கிலே ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மூன்றாம் நாளிலே உயிர்த்தெழுந்தார் ஆனால் மணிகணக்கிலே நாற்பது மணிநேரம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கல்லறையிலே அவருடைய சரீரம் வைக்கப்பட்டிருந்தது. அன்புக்குரியவர்களே அந்த நாற்பது மணிநேரமும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு சீஷனாக பரதீசியிலே பாக்கியத்தைப் பெற்றுக் கொண்டான். அதன் பிற்பாடு மூன்றாம் நாளிலே உயிர்த்தெழுந்தார். மனிதர்களுக்கு நாற்பது நாள் தரிசனம் கொடுத்தார். அவர் பரதீசிலே அல்ல. பிதாவின் வலதுபாரிசத்திற்கு சென்று விட்டார். ஆனால் அந்த கள்வன் இன்றும் பரதீசிலே இருந்து கொண்டே இருக்கிறான். இரட்சிப்பை பெற்ற கள்வன் பரதீசியின் வாழ்வை பெற்றான்.

அன்புக்குரியவர்களே இந்த வார்த்தை நமக்கும் உற்சாகத்தைத் தருகின்ற வார்த்தை. நாம் எப்படிப்பட்டவர்களாயிருந்தாலும் நாமும் இரட்சிப்பை பெற்றுக் கொள்ளமுடியும். நாமும் பரதீசியின் வாழ்வைப் பெற்றுக் கொள்ளமுடியும். நாம் பாவி என்பதைப் புரிந்துக் கொள்ள முடியும். பாவத்தை அறிக்கை செய்யவேண்டும். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து எனக்காய் காயப்பட்டார். எனக்காய் இரத்தம் சிந்தினார் என்று விசுவாசிக்க வேண்டும். அந்த விசுவாசித்தோடு ஆண்டவருடைய சந்நிதானத்தில் ஜெபிக்க வேண்டும்.அப்பொழுது நிச்சயமாய் நாம் இரட்சிப்பின் சந்தோஷத்தைப் பெற்றுக் கொள்ள முடியும். பரதீசியின் பாக்கியத்தையும் சொந்தமாக்கிக் கொள்ள முடியும். விசுவாசித்தோடு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு மன்னித்தருளும் ஆண்டவரே உம்முடைய ராஜ்யத்திலே நினைத்தருளும் என்று ஜெபிப்போம். இந்த வார்த்தையின் மூலம் தேவன் நம்மை ஆசீர்வதிப்பாராக.

●



# மூன்றாம் வார்த்தை:

**தம்முடைய தாயை நோக்கி: ஸ்திரீயே, அதோ, உன் மகன் என்றார். பின்பு அந்தச் சீஷனை நோக்கி: அதோ, உன் தாய் என்றார். யோவான்:19:26,27**

Jakulin Sheeba
Teacher, Bishop Cotton Girls' School,
Bengaluru.

**"இயேசுவானவர் சிலுவையில் மொழிந்த 7 பொன் மொழிகளுள் ஒன்று"**

**"சமத்துவத்தை பிரதிபலிக்கும் ஒரே மொழி"**

**"சாவின் விளிம்பில் இருக்கும் தருவாயிலும், தன் தாயை நினைவில் கொணர்ந்து பெண்மையை போற்றிய ஒரே கூற்று"**

இந்த வார்த்தையில் குறிப்பிடப்படும் ஸ்திரீ யார் என்றால் இயேசுவின் தாய் என்றழைக்கப்படும் மரியாள்தான். தாவீதின் குமாரனாகிய நாத்தானின் வம்சத்தில் வந்த ஏலியின் குமாரத்திதான் மரியாள். மரியாள் என்ற பெயரின் பொருள் 'கிளர்ச்சி' என்பதாகும்; இவர் தச்சர் தொழில் புரியும் யோசேப்புக்கு நியமிக்கப்பட்டிருந்தார். எபிரேய வழக்கத்தின் படியான திருமண சட்ட ரீதியான முறைகள் முடிவுப் பெற்றிருந்தன. எப்படியெனில், எபிரேய முறைப்படி இனி விவாகரத்து முறையே யல்லாமல் அவர்கள் உறவு முறிக்கப்பட இயலாது. தமது ஊர் வழக்கபடி கூறினால் திருமணம் முடிந்திருந்தது எனலாம்.

கர்த்தராகிய தேவன் மனுகுலத்தின் பாவத்திற்கான பரிகாரமாய் தனது ஒரே மகனை கொடுக்க தீர்மானித்தபோது, அவரை ஸ்திரீயின் வித்தாக பிறக்க வைக்க வேண்டும் என்பது ஆவியானவரின் திட்டம்.

அதற்காய் இஸ்ரவேலில் அநேக கன்னியர்கள் காத்திருந்தனர்; ஆனால் வாழ்ந்து கொண்டிருக்கும் மற்றும் இனி பிறக்க போகும் எந்த பெண்ணிற்கும் கிடைக்காத ஒரு பெயர் இந்த மரியாளுக்கு கொடுக்கப்பட்டது, அது என்னவெனில் "ஸ்திரீகளுக்குள்ளே ஆசீர்வதி க்கப்பட்டவள்" (லூக் 1:28). தகுதியில்லாத ஒருவருக்கு காண்பிக்கப்படும் தயவு தான் கிருபை. அந்த கிருபையை பெற்றள்தான் இந்த மரியாள்.

அடுத்ததாக அந்த வார்த்தைகளில் இருக்கும் மகன் என்பது இயேசுவின் பன்னிரெண்டு சீஷர்களில் ஒருவரான யோவான் ஆகும். இவர் இயேசுவின் அன்பான சீடன். யோவான் என்ற பெயரின் பொருள் “இறைவன் அருளாகவே இருக்கிறார், “இறைவனின் அருள்” என்பதாகும். இவர் பெத்சாயிதா ஊரை சார்ந்தவர். இவர் தந்தை செபதேயு. தாய் சலோமி. (மாற்கு 15:40;.16:1) . இவர் இயேசுவின் அன்பான சீடர்களில் மிகவும் இளையவர். மீன் பிடிக்கும் தொழில் செய்தவர்இ வசதிபடைத்தவர்.

## குணநலன்கள்

### மரியாள்

1.மரியாள் வசதிபடைத்தவளாய் இருந்தாலும் பல கஷ்டங்கள் வந்த போது தன்சுய முயற்சியினால் முன்னேறியவர்.
2.லூக் 1:35 -ல் பார்க்கும் போது மரியாள் பணிந்து போகின்ற மனம் படைத்த மங்கை என்பது புலனாகிறது.
3.மரியாள் அன்பு, தாழ்மை, பொறுமை போன்ற (லூக் 1:48) உணர்ச்சிகளின் உருவம்.
4.தன்னலம் கருதாதவர், மிகுந்த நம்பிக்கை உடையவர்(லூக்1:45).
5.பொறாமை பண்பற்றவர், தேவனை துதிக்கும் ,ஆராதிக்கும் எண்ணம் கொண்டவர்.
6.மிக பெரிய சிந்தனையாளர் (லூக் 2:19,51 ).

### யோவான்

1.தந்தை தொழிலான மீன் பிடித்தலை சார்ந்திருத்தார்.
2.யோவான் சகிப்புதன்மையற்ற ஆத்திரகுணமுள்ளவர்.
3.யோவான் பழிகூறும், கடும் சொல் கூறும் அன்பற்ற குணம் படைத்தவர் (லூக் 9:52,56).
4.தன்னலம் அதிகமாய் கருதுபவர் -மாற்10:35-41(மற்ற 10 பேரை குறித்து கவலைபடாமல் தங்கள் 2 பேரை குறித்த தன்னலம்).
5.பொறாமை பண்புடையவர்(லூக் 9:49,50).
6. தங்களில் யார் பெரியவன் என்ற போட்டியில் அதிகம் கலந்திருப்பார்.

**மரியாளிடமிருந்து இவ்வளவு முரண்பாடுகள் கொண்ட யோவான், தன்னை இயேசுவுக்காக மாற்றிக்கொண்டார்.**

இப்படிப்பட்ட மரியாளையும் யோவானையும் தாய்- மகன் உறவில் இணைத்த நிகழ்வின் ஆழங்களை மூன்று கருத்துக்கள் மூலம் பார்க்கலாம்.

## சமநிலையை அடித்தளமாய் கொள்ளுதல்:

நாம் பார்த்தோம்; மரியாள் தச்சர் குடும்பத்தைச் சார்ந்தவர், சமுதாயத்தில் உயர்ந்த வேலை, ஆனால் யோவான் மீன் வாடையில் வாழ்பவர் மேலும் இயேசு தச்சரின் மகன் ஆனால் யோவானோ மீனவரின் மகன். இயேசுதனது ஸ்தானத்தை ஒரு சாதாரண மீனவருக்கு கொடுத்து அனைவரும் சமம் என்பதை எடுத்துரைக்கிறார்.

இயேசுவானவர் சிறுவயது முதல் கடைசி வயது வரை தனது போதனையில் சமத்துவத்தைப் போதிப்பவர் மட்டுமல்லாமல் தனது வாழ்வில் கடைபிடிப்பவராகவும் வாழ்ந்தார். (எ.கா)மத் 26:6, மத் 21;:14, மாற் 5:25-29, யோ 13:5, etc.,

கிறிஸ்தவன்/கிறிஸ்தவள் என முத்திரை போடப்பட்டிருக்கும் நாம் இயேசுவின் வாழ்வை பின்பற்ற வேண்டும். ஆண் என்றோ, பெண் என்றோ; படித்தவன், படிக்காதவன் என்றோ; கீழ்ஜாதி, மேல் ஜாதி என்றோ; உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்றோ; எஜமான், அடிமை என்றோ; எந்த வேறுபாடும் காட்டாமல் உறவை வளர்க்க வேண்டும்

அப்போஸ்தலனாகிய பவுல் கலாத்தியர் 3:28 - ல் இப்படியாக சொல்கிறார் "யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை, அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை, ஆணென்றும் பெண்ணென்றுமில்லை; நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள்."

## சுயத்தினை வெறுத்து அயலகத்தை ஏற்றுக்கொள்ளல்:

" நான் என்று கூறினால் உதடுகள் ஒட்டாது
நாம் என்று கூறினால் உதடுகள் ஒட்டும்"

இயேசுவானவர் வேதனையின் உச்சத்திலும் தன்னை நினைக்காமல், தனது தாயாரை கவனிக்கிறார், தனது சீடனிடம் ஒப்படைக்கிறார். 'நானே இவ்ளோ feelings'la கஷ்டப்பட்டு நிற்கிறேன். இதுல 'என் அம்மா எக்கேடும் கெட்டு போனா எனக்கு என்ன' என்று நினையாமல் சுயநலத்தைப் பேணாமல் பிறர் நலத்தைப் பேணுகிறார்.

ஆனால் தற்போதைய நிலை என்ன?

கல்வி வளர வளர மனிதனுடைய மனது கல்லாகிறது; தன்னை கரத்திலேந்தி வளர்த்த அன்னையை மனமில்லாமல் முதியோர் இல்லத்தில் சேர்கின்றனர். "தன் தகப்பனையும் தாயையும் கனம் பண்ணாதவனின் தீபம் காரிருளில் அணைந்து போகும்" எனத் திருமறை கூறுகிறது.

எனவே தேவபிள்ளைகளான நாம் இயேசுவைப் போன்று எந்தவிதமான கடினமான பாடுகள் மத்தியிலும் தாயையும் தகப்பனையும் கனம் பண்ணுதலும், அன்பு கூறவும் வேண்டும்.

## உறவை ஏற்று அன்பைப் பொழிதல்:

"உறவுகள்" என்பது மானிடருக்கு கொடுக்கப்பட்ட ஒரு ஆசீர்வாதம். உறவுகளின் தன்மையை நன்கு அறிந்தவர் இயேசு கிறிஸ்து.(எ.கா) பெத்தானியாவின் குடும்பம் என அழைக்கப்படும் மார்த்தாள், மரியாள், லாசரு குடும்பம் அன்புக்கும் ஒற்றுமைக்கும் பேர் போன குடும்பம். மார்த்தாள், மரியாளின் சகோதரரான லாசரு மரித்து போகிறான். இதை கேள்விபட்ட இயேசு கண்ணீர் விட்டார். மானிட பிறப்பின் மகத்துவத்தைக் கண்ணீர் மூலம் பிரதிபலிக்கிறார்; உறவின் தாக்கத்தைக் கூறுகிறார். அன்பானது எதையும் சார்ந்ததாய் இருக்கக்கூடாது. ஒருவரை அவருடைய நிலைமையில் இருக்கும் போது அதிக அன்பு செய்வதே உண்மையான அன்பு.

கிறிஸ்தவ வாழ்க்கை என்பது; நாம் ஒவ்வொருவரும் தனித்தனியாக கிறிஸ்துவுடன் ஐக்கியப்பட்டிருப்பதும் அத்தோடு நாம் ஒருவருக் கொருவர் ஐக்கியப்பட்டிருப்பதும் ஆகும். கடவுளுடைய படைப்பின் மகத்துவமே, எல்லாம் ஒன்றோடொன்று பிணைக்கப்பட்டிருப்பதே. ஒன்று இல்லாமல் இன்னொன்று வாழ முடியாது என்பதே அது. மனிதர்களுடைய வாழ்வின் சுவையே உறவு/ குடும்பம் அமைப்பில் தான் ஆரம்பிக்கிறது. இங்குதான் மனிதர்கள் தங்களுடைய படைப்பின் நோக்கத்தை உணர ஆரம்பிக்கிறார்கள்

## முடிவுரை

நாற்பது நாட்கள் Lent days கடந்து துக்க வெள்ளியில் பிரவேசித்திருக்கிறோம். 40 நாட்கள் தியானங்களையும் Lent கால செய்திகளையும் கேட்டு வந்தோம். நம்மை நாமே வெறுத்து! பலரும் உபவாசம் இருந்து ஜெபித்தோம். ஆனால் ! 'எனது சிந்தனை, சொல், செயல் ஆகியவற்றில் ஏதேனும் மாற்றம் உண்டோ?' என நம்மை நாமே சிந்தித்துப் பார்ப்போம்.

சிலுவை பாடுகளை தியானிப்பது மட்டும் முக்கியமல்ல. மாறாக அவரது சிலுவை பாடுகளை நாமும் ஏற்க முன் வர வேண்டும். எனவே சமநிலையை கடைபிடித்து, சுயத்தை வெறுத்து, அன்பை பொழிந்து இயேசுவின் வழி வாழ்வோம்.

●

# நான்காம் வார்த்தை:

**ஒன்பதாம் மணி நேரத்தில் இயேசு: ஏலீ! ஏலீ! லாமா சபக்தானி, என்று மிகுந்த சத்தமிட்டுக் கூப்பிட்டார்; அதற்கு என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர் என்று அர்த்தமாம். மத்தேயு:27:46, மாற்கு:15:34**

Rev. Dr. Joshua Siromony
Former Principal CTS, Nagercoil

## என் கடவுளே , என் கடவுளே , ஏன் என்னை கைவிட்டீர் ?

“குற்றத்துக்கு சரியான தண்டனை கிடைக்கத்தான் வேண்டும்; அதிகாரத்திலிருக்கும் எவரும் தலையிடக் கூடாது” என்பது ஏற்புடைய நியாயமாகும். எனவே, இவர் என் நேசகுமாரன் இவரில் பிரியமாயிருக்கிறேன் ‘என உலகறியச் சொல்லியிருந்தாலும், இயேசு சிலுவையில் கொல்லப்படும் போது மௌனம் காத்த பிதாவின் செயல் எவரும் கேள்வி கேட்க முடியாத ஒன்று தான். ஆனாலும், குமாரன் செய்த குற்றம் என்ன? இவ்வளவு கொடிய தண்டனையா? இப்படி தண்டிக்கப்பட்டால் யாருக்கென்ன நன்மை? போன்ற கேள்விகளுக்கான விடை காண்பது இயலும்.

இயேசுவில் குற்றமொன்றுமில்லை என விசாரணை அதிகாரிகள் நன்றாகவே அறிந்திருந்தனர். ஏறுமுகமாகவே இருந்த புகழ் கண்டு, பொறாமையினால் (மாற்.15:10) உருவான விரோதம் தான் என்று அறிந்திருந்தனர். தேவதூஷணம், தேவதுரோகம் போன்ற பொய் வழக்குகள் போடப்பட்டிருந்தும் அவற்றை விசாரித்த ரோம கவர்னர் பொந்தியு பிலாத்துவும், கலிலேய நாட்டு அரசன் ஏரோதுவும் மரணதண்டனைக்கேதுவான எந்த குற்றமும் இல்லை (லூக். 23:13-15) என்றே கூறியுள்ளனர். மதம், அரசியல், சமுதாயம் யாவும் ஒன்று திரண்டு நீதிபதி பிலாத்துவை நிர்பந்தித்து எழுதிவாங்கியது தான் அந்த தீர்ப்பு. தீர்ப்பு வழங்கிய பின் இந்த இரத்தபழிக்கு நான் குற்றமற்றவன் (மத்.27:14) எனக் கூறி கைகழுவியதிலிருந்து அப்பட்டமாகவே அறிந்து கொள்ளலாம்.

குற்றமோ குறைவோ ஏதுமில்லாத அப்பழுக்கற்ற தேவாட்டுக்குட்டியாம் இயேசு நம் எல்லாருக்குமாக பாவமாக்கப்பட்டார். அதாவது, உலக மக்கள் அனைவருடைய பாவங்களையும்

தம் மீது ஏற்றுக்கொண்டார். இது தான் அவர் செய்த குற்றம். வாழ்வாதாரத்திலிருந்து துண்டிக்கப்படுவதற்கும், கொடிய பாடுகளுக்கும், தாங்கொணா துயரத்திற்கும் அதுவே காரணமாயிற்று. இத்துணை கொடிய தண்டணையை அனுபவித்து முடியும் தருவாயில், அவர் கதறி சொன்ன வார்த்தைகளை வெற்றி முழக்க மாகவே! ஏமாற்றத்தின்/தோல்வியின் குரலாகவோ காண முடியாது. நீதிக்காகவும் நேர்மைக்காகவும் போராடி தாங்கொணா துயரத்தில் “என் கடவுளே என் கடவுளே ஏன் என்னை கைவிட்டீர்”? (சங்.22:1) என காலங்கள் தோறும் கதறுவோறின் கூற்றையே இயேசு தமதாக்கி கூறியிருப்பது அவர்களது போராட்டத்திற்குக் கிடைத்த அங்கீகாரமாகக் காணலாம். அதாவது, கடவுளின் மனமறிந்து, நீதி, நியாயத்துக்காக உறுதியாக நின்று கொடியர் கூட்டத்தில் பெரும் அவதிக்குள்ளாகிய பின், முடிவான வெற்றிகள் வாரிக்குவித்த மொர்தெகாய், எஸ்தர், தாவீது, தானியேல், எரேமியா பக்தர்களின் வாழ்க்கையையும் திரும்பிப் பார்க்க வைக்கிறது இவ்வாசகம்.

இது ஒருபுறமிருக்க, இயேசுவின் இந்த நான்காம் மொழி அவர் அடைந்த பாடுகளின் உச்சமாகவே உள்ளது; அதில் வெளிப்ப டுத்தப்பட்டிருக்கும் வேதனைகளை முழுமையாக பிற மொழிகளில் மொழிபெயர்த்துக் காட்டமுடியுமா? என்பதும் கேள்வியாகவே உள்ளது.தேவபாஷை எனக் கூறப்படும் சமஸ்கிருதத்தில் எழுதப்ப ட்டிருக்கும் மந்திரங்களை தமிழில் ஓதினால் ஆக்கதிறன் குறைந்துவிடக்கூடும் என்பதும், விண்ணிலிருந்து இறக்கி வைக்கப் பட்டுள்ள அரபிமொழி செய்தியினை மொழியாக்கம் செய்ய இயலாது, அதன் பொருள் மட்டும் தான் மொழியாக்கம் செய்ய இயலும் என்பதும் மக்களின் நம்பிக்கை. அந்த வரிசையில் உலக மீட்புக்காக இயேசு நாதர் சந்திக்க நேர்ந்த கொடிய வேதனைகளை முழுமையாய்ப் புரிந்து கொள்வது மனித அறிவுக்கெட்டாத ஒன்று. எனவே அவற்றின் பொருளை இலக்கிய மொழியில் ஆக்கியதுடன், அவர் அழுது புலம்பியதை அப்படியே எழுதியுள்ளனர் நற்செய்தி ஆசிரியர்கள். இயேசுவின் நான்காம் திருமொழியை அரமேயத்திலும் எழுதியிருக்கும் ஆசிரியர்களின் நோக்கத்தினை இப்படி காண்பது பயனள்ள பார்வையாகும்.

இயேசு நாதரின் நாட்களில் பாலஸ்தீனா தேசத்தில் எபிரேயம்,இ கிரேக்கம், லத்தீன் ஆகிய மூன்று இலக்கிய மொழிகளுடன் அரமேயம் என்னும் பேச்சு மொழியும் நடைமுறையில் இருந்தது. செம்மொழி அந்தஸ்துடைய எபிரேயம் என்பது யூதரின் தொன்மையான தாய் மொழியாகும். கிரேக்க நாட்டு தத்துவ ஞானம் மற்றும் கலாச்சார

பின்னணியில் தோன்றி, மகா அலெக்சாண்டருடன் படையெடுப்புக்குப்பின் அவர் சென்ற உலக நாடுகளெங்கும் செல்வாக்கு பெற்றிருந்தது கிரேக்க மொழி. லத்தீன் என்பது இயேசுவின் காலத்தில் அரசியலுக்கும் அதிகாரத்துக்கும் பேர் போன ரோமபேரரசின் ஆட்சிமொழியாகும். ஆனாலும், பாலஸ்தீனம் உள்ளிட்ட மத்திய கிழக்கு (Middle – East) நாடுகளெங்கும் படித்தவர் முதல் பழங்குடியினர் வரையிலான பொதுமக்களிடையே பேச்சு மொழியாக இருந்தது அரமேயம் ஆகும். அரமேய வாசகங்களை எழுதவேண்டிய நேரங்களில் எபிரேய எழுத்துக்களால் எழுதுவது யூதரின் வழக்கம். இயேசு நாதர் பொது மக்களோடு பேசும் போதும், சிலுவையிலிருந்து பேசியதும் அரமேய மொழியே என பொதுவாக நம்பப்படுகிறது. இயேசு நாதர் பற்றிய நிகழ்வுகளையும் அவரது உரைகளையும் கிரேக்க மொழியில் எழுதி உலகறியச் செய்திருக்கும் நற்செய்தி ஆசிரியர்கள் ஓரிரு இடங்களில் மட்டும் அரமேய கூற்றினை அப்படியே எழுதியிருக்கின்றனர். அவற்றுள் முக்கியமானது இந்த நான்காம் திருமொழியாகும். (மாற் .15:34இ மத் .27:46)

புரிந்துகொள்ளவும் விளக்கிக்கூறவும் இந்த சிலுவையின் நான்காம் மொழி இயேசுவின் பாடுகளை வெளிப்படுத்தும் முக்கியமான, ஒப்பற்ற வாசகமாகும். 'தாகமாயிருக்கிறேன்' எனக் கூறியது பாடுகளின் ஒரு பகுதியைக் காட்டக்கூடியதுதான். மீதி ஐந்தும், பாடுகளின் போது கூட இரட்சிப்பின் பணி பிதாவாம் கடவுளை மகிமைப்படுத்தி அவரில் சாய்ந்து கொள்ளும் இயேசுவின் சிறந்த பண்பு இவற்றைக் காட்டுவதாகவே உள்ளன. ஆனால், இந்த நான்காம் மொழி மட்டும் மற்றவைகளிலிருந்து முற்றிலும் மாறுபட்டு, உள்ளத்திலும் உடலிலும் மனதிலும் இயேசுவக்கு ஏற்பட்ட துயரம், வேதனை, அழுகை யாவையும் வெளிப்படுத்துவதாக மட்டும் உள்ளது.

உலகத்தின் பாவத்தைத் சுமந்து தீர்க்கும் தேவ ஆட்டுக்குட்டியாக இயேசு நாதர் பாடுகளையும் சிலுவைச்சாவையும் ஏற்றுக்கொண்டார் என்பது திருமறை செய்தி. பாடுகள் வாழ்க்கை முழுவதும் இருக்கும், ஆனால், மரணம் ஒரு முறை மட்டும் நிகழும். மரணத்திற்குப் பின் வாழ்வும் இல்லை, வாழ்வு இல்லாததினால் பாடுகளும் இல்லை, இது உலக வாழ்க்கை அனுபவம். பாடுகளும் சோதனைகளும் மிகக் கடினமாக இருந்த போதெல்லாம் பரத்தோடு அதாவது பிதாவோடு ஜெப ஐக்கியத்திலும் தொடர்பிலும் இருந்த இயேசு அவற்றை தாங்கிக் கொண்டார். ஆனால், பரத்தோடுள்ள இணைப்பிலிருந்து, பாவத்தின் சம்பளமெனும் மரணத்தால் துண்டிக்கப்பட்டு தனித்து விடப்படுதல் என்பது கொடுமையிலும் கொடுமையாகும். அதுவே பாவத்தின்

சம்பளமெனும் மரணம், அல்லது நித்திய மரணம். இயேசுவின் உடலில் உணர்வும் உயிரும் இருக்கும் போதே, 'பரத்திலிருந்து துண்டிக்கப்படுதல்' எனும் ஆத்தும மரணத்தை பாவமனுக்குலத்துக்காக அனுபவித்துள்ளார். அந்த கசப்பான,கொடிய அனுபவத்தின் முடிவில் வெளிப்பட்ட அழுகுரல் தான் இந்த நான்காம் திருமொழி.

தாயாகும் போது அவள் வருந்தி அழுத அடுத்த நொடியில் மழலை அழுவதுடன் எல்லாம் முடிந்து விடுகின்ற 'சுப முகூர்த்தம்' போன்றது தான் இது. ஆனாலும், அந்த வலியும் அழுகையும் ஒரு நொடியே ஆயினும், பல யுகங்கள் கடந்தது போல் தோன்றக்கூடும். பேருயிரிலிருந்து சிற்றுயிர் துண்டிக்கப்பட்டு எங்குமிலாது ஊசலாடுகின்ற அந்த துயரத்தை, கசப்பான அனுபவத்தை இயல் - இசை – நாடகம் எனும் முத்தமிழிலும் புலமை பெற்றவரால் கூட விவரிக்க முடியாதென இரட்சண்ய யாத்திரம் ஆசிரியர் எச்.ஏ. கிருக்ஷ்ணபிள்ளை கூறுகிறார்.

*'முத்தமிழாதி பாடை முழுதுணர் கவிஞரேனும்*
*வித்தகனடைந்த ஆன்மவேதனையினையவென்று*
*வித்தசித்துரைக்க வல்லாரல்லர் இத்மெய்மை தேர்ந்தும்*
*பித்தசிற் பிதற்றுகின்றேன் பேதை பேராசை கொண்டே'.*

வாழ்வின் ஊற்றும் ஆதாரமாய் விளங்கும் கடவுளிடமிருந்து பாவமனுக்குலம் விலகிக்கொண்டே இருப்பது நித்திய மரணத்திற்குள் கொண்டு போய் விடும். எனவே, நம்மை வாழ்வின் ஆதாரமாம் கடவுளோடு நிரந்தர இணைப்பில் உறுதிப்படுத்துவதற்காக இயேசு கிறிஸ்து கொடுந்துன்பம் அனுபவிக்க நேர்ந்தது. அவர் அடைந்த பாடுகளின் பலனாகிய மீட்பினைப் பெற்ற நாம் கடவுளோடுள்ள நல்லுறவிலும் நன்றியுணர்வோடும் வாழ தூயாவியானவர் துணை செய்வாராக ஆமேன்.

●



# ஐந்தாம் வார்த்தை:

**அதன்பின்பு, எல்லாம் முடிந்தது என்று இயேசு அறிந்து, வேதவாக்கியம் நிறைவேறத்தக்கதாக: தாகமாயிருக்கிறேன் என்றார். யோவான்:19:28.**

Rev. Justin Devadason
Rtd. District Chairman
CSI KK Diocese

*"இதன்பின், அனைத்தும் நிறைவேறிவிட்டது என்பதை அறிந்த இயேசு தாகமாய் இருக்கிறது என்றார். மறைநூலில் எழுதியுள்ளது நிறவேறவே இவ்வாறு சொன்னார். அங்கே ஒரு பாத்திரம் நிறையப் புளித்த திராட்சை இரசம் இருந்தது. அதில் கடற்பஞ்சை நன்கு தோய்த்து ஈசோப்புத் தண்டில் பொருத்தி அதை அவர்கள் அவரது வாயில் வைத்தார்கள்." (யோவான் 19:28,29).*

## முன்னுரை:

இயேசு கிறிஸ்துவின் வாழ்வில் எதுவுமே எதிர்பாராமல் நடந்ததல்ல. அனைத்துமே முன் தீர்மானிக்கப்பட்டவைகள், இறைவனால் முன் குறிக்கப்பட்டவைகள். இயேசு நாதரும் எல்லாவற்றையும் முன்னறிந்திருந்தார். எனவே தான் இயேசு நாதர் "மானிட மகன் தமக்கென்று குறிக்கப்பட்டபடியே போகிறார்" என்று தமது சாவை முன்னறிவித்திருந்தார் (லூக். 22:22). அது மட்டுமல்ல தமது மரணம் இன்னவிதமாக நடைபெறப்போகிறது என்பதையும், மூன்றாம் நாள் தான் உயிருடன் எழுந்திருப்பதையும் கூட அவர் முன்னதாகவே அறிவித்திருந்தார் (மத். 16:21). மேலும் தன்னைத் தனது சீடர்களுள் ஒருவரான யூதா ஸ்காரியோத் காட்டிக்கொடுப்பதையும், இன்னொரு சீடரான பேதுரு மறுதலிப்பதையும் கூட முன்னதாகவே அறிவித்திருந்தார் (மத். 26:21-25; லூக். 22:34). இங்கும் முன்னுரைகளின் நிறைவேறுதலாகவே அவர் "தாகமாயிருக்கிறேன்" என்று கூறியுள்ளார்.

காடியைக் குடிக்கக் கொடுத்தனர்:

இயேசுவின் சிலுவை மரண நிகழ்வில் இருமுறை காடியைக் குடிக்கக்கொடுத்ததாக திருமறையில் சொல்லப்பட்டுள்ளது. ஒன்று உடலின் வலி தெரியாமலிருப்பதற்காகக் கொடுக்கப்படும் போதை பானம். இப்பானத்தினை குற்றவாளிகளைச் சிலுவையில் அறைவதற்கு

முன் அவர்களுக்குக் கொடுப்பர். மடிகின்றவர்களுக்கு மதுபானத்தைக் கொடுக்கும் ஆலோசனையினை மன்னராகிய லேமுவேலின் தாய் தன் மகனிடம் கூறியுள்ளார் (நீதி. 31:6). மத்தேயு நற்செய்தியாளர் இதனை கசப்பு கலந்த காடி என்றும் (மத். 27:34), மாற்கு நற்செய்தியாளர் வெள்ளைப்போளம் கலந்த திராட்சை ரசம் என்றும் (மாற்கு 15:23) குறிப்பிட்டுள்ளனர். இதனைக் குற்றவாளிகளுக்குக் கொடுக்கவேண்டும் என்று ரோமாபுரி நியதிகள் ஒன்றும் வகுத்திருக்கவில்லை. ஆயினும் குற்றவாளிகளின் உறவினர்கள் இதனை முன்னதாகவே போர்ச்சேவகர்களின் வழியாக ஒழுங்கு செய்வதுண்டு. இயேசுவிடம் அன்பு கொண்டிருந்த பெண்கள் அவர் சரீர வலியினை உணராதிருக்க இதனைச் செய்திருக்கலாம் எனத் திருமறை பண்டிதர்கள் கருதுகின்றனர். ஆனால் இயேசு நாதர் அதனை மறுத்து விட்டார் (மாற்கு 15:23). தந்தையாம் கடவுளின் சித்தத்தினை முழுமையுடன் செய்து நிறைவேற்ற சிலுவையின் பாடுகள் அனைத்தையும் முழுமையாகத் தனது சரீரத்தில் ஏற்றுக் கொள்ளும் திருமைந்தரின் சமர்ப்பணமே இது என நாம் புரிந்து கொள்ளலாம்.

இயேசு நாதருக்குத் தரப்பட்ட இன்னொரு பானம் புளித்த காடி. இயேசு நாதர் சிலுவையிலறையப்பட்டு "தாகமாயிருக்கிறேன்" என்று என்று மொழிந்ததும் அங்கே வைக்கப்பட்டிருந்த காடி நிறைந்த பாத்திரத்திலிருந்து கடற்காளானைக் காடியிலே தோய்த்து ஈசோப்புத்தண்டில் மாட்டி, அவர் வாயினிடத்தில் நீட்டிக்கொடுத்தார்கள் (யோவான் 19:29). இது மதுபானமல்ல; மாறாக, புளிப்பான திராட்சை இரசத்துடன் தண்ணீரைச் சேர்த்து பருகும் தாகபானமாகும். இது விலை மலிவானது. தண்ணீரை விட தாகத்தினைத் தீர்க்கும் ஆற்றல் கொண்டது. சிலுவையிலறையப் பட்டவர்களைக் காத்து நிற்கும் ரோமாபுரி வீரர்கள் குற்றவாளிகள் சாகும் வரையிலும் காத்திருக்க வேண்டியதாகையால் தங்கள் தாகத்தைத் தீர்த்துக்கொள்ள இப்பானத்தினைப் பயன்படுத்துவர். இயேசு நாதர் தாகமாயிருக்கிறேன் என்று கூறிய வேளையில் காவல் வீரர்கள், இதர குற்றவாளிகளிலிருந்து இயேசு நாதர் வேறுபட்டிருந்ததை அவரது உரைகளாலும், சிலுவை மரணத்தை அவர் சந்தித்த முறைகளாலும் உணர்ந்திருந்ததால் அவர் மீது பரிவு கொண்டு தங்களுக்கென வைத்திருந்த தாக பானத்தை அவருக்கு கொடுத்தனர் என்று இறை பண்டிதர்கள் கருதுகிறார்கள். இயேசு நாதருக்கும் அடுத்த சிலுவை மொழிகளைச் சொல்ல, வறட்சியடைந்த நாவினை இயக்க தண்ணீர் தேவையாயிருந்ததால் அதனை அவர் ஏற்றிருக்கலாம்.

## கடற்பஞ்சு அல்லது கடற்காளான்: (Sponge)

கடற்பஞ்சு அல்லது கடற்காளான் என்பது மத்திய தரைக் கடற்கரைப் பகுதிகளில் காணப்படும் ஒருவகை காளான் வகையினைச் சார்ந்த உயிரினமாகும். இது திரவங்களை உறிஞ்சும் தன்மை கொண்டது. ரோமாபுரி படை வீரர்களின் தலைச் சீராவின் உட்பகுதிகளில் இவைகளின் மிருதுவான தன்மைக்காக பதிக்கப்பட்டிருக்கும். மேலும் அவர்கள் தண்ணீரைப் பருகுவதற்காகவும் இதனைப் பயன்படுத்துவர். எனவே படைவீர்ர்களின் பயன்பாட்டு பொருட்களில் இக்கடற்காளானும் அடங்கும். இயேசு நாதர் தாகமாயிருக்கிறேன் என்றதும் தங்களது உபயோகத்திற்காக வைத்திருந்த கடற்காளானைக் காடியிலே தோய்த்து அவருக்குக் கொடுத்தனர் என்பதை நாம் அறிந்து கொள்ளலாம்.

## ஈசோப்பு தண்டு: (Hyssop)

ஈசோப்பு என்பது நீல வண்ண பூக்களைக் கொண்ட ஒரு வகை குற்றுச் செடியாகும். இது நாணல் வகை செடியினைச் சார்ந்தது. எனவே இதன் தண்டு பகுதி நீளமாக இருக்கும். இதன் இலைகளும் தண்டும் நறுமணம் மிகுந்ததாக இருக்கும். திருமறையில் தூய்மைப்படுத்தும் ஊடகமாக இது பயன்படுத்தப்பட்டிருப்பதை நாம் காணமுடியும். முதல் பஸ்காவினை ஆசரிக்கும்போது அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியின் இரத்தத்தை பாத்திரத்தில் சேர்த்து ஈசோப்பு கொழுந்துகளின் கொத்துகளில் தோய்த்து அதனை இஸ்ரவேலர் இல்லங்களின் நிலைக்கால்களில் பூச அறிவுறுத்தப்பட்டனர். இது சங்கார தூதன் இஸ்ரவேலரின் இல்லங்களில் வந்து விடாதபடி தடைசெய்யும் அடையாளமாய் அமைந்தது (யாத். 12:22). மட்டுமின்றி ஆசரிப்பு கூடாரத்தின் பலிகளை இரத்தம் தெளித்து தூய்மைப்படுத்தவும் ஈசோப்பு பயன்படுத்தப்பட்டதை திருமறையில் நாம் காண்கிறோம் (லேவி. 4:4-6; எண். 19:6,18). மட்டுமின்றி திருப்பாடகரான தாவீதும் கடவுளிடம் மன்றாடும் போது: “ஈசோப்பினால் என்னைக் கழுவியருளும்; நான் தூய்மையாவேன்” என்று கூறியுள்ளார் (சங். 51:7). இத்தூய நியமங்களை மனதில் கொண்டே யோவான் நற்செய்தி ஆக்கியோன் படைவீர்ர் கடற்காளானைக் காடியில் தோய்த்து ஈசோப்பு தண்டில் பொருத்தி அதனைக் குடிக்கும் பொருட்டு இயேசுவின் வாயில் தந்த நிகழ்வினை எழுதியிருக்கிறார் என்றும் நாம் உணர்ந்து கொள்ளலாம்.

## தாகமாயிருக்கிறேன்: சரீரத்தில் வெளிப்பட்ட வாய்மையின் குரல்:

இயேசு கிறிஸ்துவின் சரீரம் மண்ணின் தன்மை கொண்ட மனித சரீரமல்ல, மாறாக அது விண்ணின் தன்மை கொண்டது. எனவே அவர்

சிலுவையில் அறையப்பட்டது உண்மையல்ல, அது ஒரு மாய தோற்றமே என இரண்டாம் நூற்றாண்டில் தோன்றிய ஞானவாதக் கொள்கையினர் (Gnostics) என்னும் திரிபு கொள்கையாளர்கள் கருதினர். கடவுளை சிலுவையிலறைய முடியுமா என்று தங்கள் அறிவின் வழி கேள்விகளை எழுப்பினர். ஆனால் திருமறையின் வழியாக நமக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ள நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தமது மானிடப்பிறப்பிலிருந்தே அவர் முழுமையான மானிடனாகவே அவர் வாழ்ந்தார். அவரது உபவாச நாட்கள் முடிந்தபின் அவருக்குப் பசியுண்டாயிற்று (மத். 4:2). யூதேயாவை விட்டு அவர் சமாரியா நாட்டின் வழியாய் கலிலேயாவுக்குச் சென்ற வேளையில் நீண்ட தூர பயணக் களைப்பினால் அவர் தாகமடைந்தார் (யோவான் 4:4-8). அவர் பாவிகளுடைய இல்லங்களிலும் அவர்களுடன் அமர்ந்து உணவருந்துகிறார் என்னும் குற்றச்சாட்டு அவர் மீது எழுமளவிற்கு பரிசேயர்கள், ஆயக்காரரர்கள் என வேறுபாடின்றி பலருடைய இல்லங்களிலே சென்று அவர் உணவருந்தினார் (லூக். 15:2). இறுதியில் மேல்வீட்டறையில் சீடர்களுடன் அமர்ந்து அப்பத்தையும் திராட்சை இரசத்தையும் உட்கொண்டார். கெத்சமனேயில் அவர் மிகுந்த வியாகுலத்துடன் வேண்டுதல் செய்ததால் அவரது வியர்வையானது இரத்தத்தின் பெருந்துளிகளாய்த் தரையிலே விழுந்தன (லூக். 22:44). தொடர்ந்து ஆலய காவலர்களாலும், அரண்மனைக் காவலர்களாலும் விசாரணை என்ற பெயரில் துன்புறுத்தப்பட்டு, சிலுவையிலும் அறையப்பட்டதால் அவரது சரீரத்திலிருந்து உதிரம் அதிகமாய் வெளிப்பட்டது. இதன் விளைவால் அவரது சரீரத்தில் மிகுந்த தாகம் ஏற்படுவது இயற்கையே. உள்ளதை உள்ளதென்றும் இல்லதை இல்லது என்றும் சொல்லுங்கள் என்றுரைத்த ஆண்டவர் தமது சரீரத்தின் உண்மையான தேவையினையும் "தாகமாயிருக்கிறேன்" எனச் சிலுவையில் உள்ளவாறே வெளிப்படுத்தி முழுமையான மனிதனாக வாழ்ந்து நமது வாழ்வுக்குச் மாதிரியானார்.

## ஆன்மீக அவசியத்தின் குரல்:

இயேசு நாதர் தாகத்தினைக் குறித்து தமது உணர்வுகளை வெளிப்படுத்திய வேளைகளிலெல்லாம் சரீர தாகத்தைக் குறித்து மட்டும் குறிப்பிடாமல் ஆன்மீக தாகத்தையும் இணைத்தே குறிப்பிட்டுள்ளார். சமாரியா நாட்டுப் பெண்மணியிடம் "குடிக்க எனக்குத் தண்ணீர் கொடும்" என்று கேட்டவர் பின்னர் "கடவுளுடைய கொடை எது என்பதையும் குடிக்கத் தண்ணீர் கொடும் எனக் கேட்பவர் யார் என்பதையும் நீர் அறிந்திருந்தால் நீரே அவரிடம் கேட்டிருப்பீர்; அவரும் உமக்கு வாழ்வு தரும் தண்ணீரைக் கொடுத்திருப்பார்" (யோவான் 4:10) என்று தமது தாகத்தை விட அப்பெண்மணியினை

இறையன்புக்குள் கொண்டுவருவதே முதன்மையானது என்பதை வெளிப்படுத்தினார். தன்னை "வாழ்வு தரும் உணவு" என்று பிரகடனப்படுத்தியவர் "என்னிடம் வருபவருக்குப் பசியே இராது; என்னிடம் நம்பிக்கை கொண்டிருப்போருக்குத் தாகம் இராது" (யோவான் 6:34,35) என்றும் "எனது சதை உண்மையான உணவு; எனது இரத்தம் உண்மையான பானம். எனது சதையை உண்டு எனது இரத்தத்தைக் குடிப்போர் என்னோடு இணைந்திருப்பர். நானும் அவர்களோடு இணைந்திருப்பேன்" (யோவான் 6:55,56) என்றும் சரீரமானது புசித்துக் குடித்து விலங்குகளைப் போல் மடிந்து விடுவதற்கல்ல, மாறாக பகிர்ந்து, கரிசனை தந்து, கனிந்து ஆன்மாவைக் கறையற்றதாய் பாதுகாக்கவே என்னும் மாபெரும் உண்மையை தாகமாயிருக்கிறேன் என்னும் மொழியால் உறுதிப்படுத்தினார்.

## இறை சமுகத்துடன் இணையும் ஆவலின் குரல்:

இயேசு கிறிஸ்துவின் பிறப்பினை யோவான் நற்செய்தியாளர் "வாக்கு மனிதர் ஆனார்; நம்மிடையே குடி கொண்டார்" (யோவான் 1:14). எனக் குறிப்பிடுகின்றார். இயேசு மரியாளின் வயிற்றில் கருக்கொண்டிருந்தாலும் அவர் தூய ஆவியரால் கருக்கொண்டார் என்பதைத் திருமறை மிகத் தெளிவாகச் சுட்டிக்காட்டுகின்றது. எனவே அவரது சரீரம் முழுமையான மானிட சரீரமாயினும் முழுமையான இறை தன்மை கொண்டவர். விண்ணிலிருந்து இறை தீர்மானமாய் மண்ணிற்கு வந்தவர் இறை தீர்மானத்தை முழுமையாய் நிறைவேற்றிவிட்டு அவர் விண்ணிற்கு செல்ல வேண்டும். தாகமாயிருக்கிறேன் என்னும் அவரது குரல் இறை சமுகத்துடன் இணைந்து விடும் தாகத்தை வெளிப்படுத்தும் ஆவலின் குரலாகவும் நாம் காண்கிறோம். திருப்பாடகர் தாவீது மேசியாவினைக் குறித்த தமது பாடல் வரிகளால் இதனை உறுதிப்படுத்துகின்றார்: "கலைமான் நீரோடைகளுக்காக ஏங்கித் தவிப்பது போல் கடவுளே! என் நெஞ்சம் உமக்காக ஏங்கித் தவிக்கின்றது. என் நெஞ்சம் கடவுள் மிது, உயிருள்ள இறைவன் மீது தாகம் கொண்டுள்ளது; எப்பொழுது நான் கடவுள் முன்னிலையில் வந்து நிற்கப்போகின்றேன்." தந்தையின் தீர்மானத்தை முழுமையாக நிறைவேற்றிய திருமைந்தனார் அந்த முழுமையான நிறைவோடு தந்தையிடம் செல்லும் ஆவலில் தாகமாயிருக்கிறேன் என்று கூறுகிறார்.

## முடிவுரை:

நமக்காகவே அவர் தாகமுற்றார் என்பதை அறிந்து கொள்வதே இச்சிலுவை சிந்தனையின் நிறைவாகும். சிலுவையின் பாடுகள் அனைத்தையும் நமக்காகவே அவர் தமது சரீரத்தில் ஏற்றுக்கொண்டார். ஏசாயா தீர்க்கர் அதனை இவ்விதமாய் குறிப்பிடுகின்றார்: "அவரோ நம்

குற்றங்களுக்காக்க் காயமடைந்தார்; நம் தீச்செயல்களுக்காக நொறுக்கப்பட்டார்; நமக்கு நிறைவாழ்வளிக்க அவர் தண்டிக்கப்பட்டார்; அவர்தம் காயங்களால் நாம் குணமடைகின்றோம்" (ஏசாயா 53:5). நமது பாவங்களைத் தன்மீது சுமந்ததாலேயே அவர் நொறுக்கப்பட்டு தாகமடைந்தார். இம்மாபெரும் அன்பிற்குள் நம்மை இணைத்து அவர் சித்தம் செய்யும் பதிலுரையாய் வாழ்வோம். இறையாசி அனைவரிலும் நிறைந்திருப்பதாக.

●



## ஆறாம் வார்த்தை:

**இயேசு காடியை வாங்கினபின்பு, முடிந்தது என்று சொல்லி, தலையைச்சாய்த்து, ஆவியை ஒப்புக்கொடுத்தார். யோவான்:19:30.**

Dr. Stanley Jones,
Union Biblical Seminary, Pune

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சிலுவையிலிருந்து மொழிந்த ஆறாவது வார்த்தை “முடிந்தது” என்ற ஒற்றைச் சொல் (யோவான் 19:30). முடிந்தது என்பது “ஒரு வார்த்தை வாக்கியம்.” ஆனால் இயேசுவின் ஊழியம் முழுவதும் இந்த ஒற்றை வார்த்தையில் திரட்டப்பட்டுள்ளது. மன நிறைவின் நம்மதி பெருமூச்சு இந்த வார்த்தையில் எதிர்ஒலிக்கிறது.

உண்மையில், முடிந்தது என்ற வார்த்தை இயேசுவின் எதிராளிகளிடமிருந்து வந்திருக்கவேண்டிய வார்த்தை. நாங்கள் திட்டமிட்டு அவரைப் பிடித்து, விசாரித்து, கொல்கதாவுக்கு இழுத்துச் சென்று சிலுவையில் அறைந்து எங்கள் வேலையை சிறப்பாய் முடித்தோம். நாங்கள் நினைத்தது எல்லாம் முடிந்தது என்று இயேசுவின் எதிரிகள் சொல்லியிருக்க வேண்டும். ஆனால் அவர்கள் அல்ல, மாறாக இயேசு, எல்லாம் நிறைவேறிற்று என்று அறிந்து ‘முடிந்தது’ என்று வெற்றிமுழக்கமிடுகிறார்.

எனவே இது தோல்வியின் வார்த்தை அல்ல, வெற்றியின் வார்த்தை, வேதனையின் வார்த்தை அல்ல, மகிழ்ச்சியின் வார்த்தை. யோவான் தவிர்த்து மற்ற மூன்று நற்செய்தியாளர்களும் (மத்தேயு 27:50, மாற்கு 15:37, லூக்கா), இயேசு சத்தமிட்டு கூப்பிட்டார் என்று குறிப்பிடுகிறார்கள். இயேசு மகாசத்தமாய்க் கூப்பிட்டு, ஆவியை விட்டார். எனவே இது வெற்றியின் முழக்கமே ஒழிய வேதனையில் வெளிப்பாடு அல்ல. இந்த வெற்றியின் முழக்கம் இயேசுவின் ஊழியத்தை குறித்து நமக்கு கற்றுத்தரும் மூன்று குறிப்புகளை தொடர்ந்து பார்க்கலாம்.

### 1. 1. இயேசுவின் சரீர பாடுகளின் முடிவை குறிக்கிறது - Signifies the end of physical suffering

இயேசுவின் உலக வாழக்கையின் போது, துன்பம் ஒரு நிழல் போல அவரை தொடர்ந்தது. ஏரோது சிறுவயதில் அவரைக் கொல்ல முயன்றான். பரிசேயர்கள், சதுசேயர்கள் இயேசுவுக்கு எதிராக சதி செய்து அவரை கொலை செய்ய முயற்சித்தார்கள். சாத்தான் இயேசுவை ஆலயத்தின் உச்சியில் இருந்து தள்ளிப்போட எத்தனித்தான். அவருடைய சீஷர்களே அவரை காட்டிக்கொடுத்து மறுதலித்தார்கள். சிலுவையில் தொங்கும் போது கோர வலியை சகித்தார். இயேசு தேவ குமாரனாக இருந்தாலும், அவர் நூறு சதவீதம் மனிதனாகவே இந்த உலகத்தில் வாழ்ந்தார் என்பது நமக்கு தெரியும். எனவே எந்த ஒரு சாதாரண மனிதனும் பாடுபடுவதைப் போலவே சிலுவையில் இயேசுவும் பாடுபட்டார். நாம் சிலுவையில் அறையப்பட்டால் என்ன வலி நமக்கு இருக்குமோ, அதே வலியை அவரும் அனுபவித்தார். இந்த உடல் துன்பங்கள் அனைத்தும் முடிவுக்கு வந்துவிட்டது என்பதை இந்த வார்த்தை நமக்கு வெளிப்படுத்துகிறது.

இனி யாரும் அவரை சாட்டையால் அடிக்க முடியாது, யாரும் அவருக்கு முள்கிரீடம் அணிய முடியாது, யாரும் ஆணிகளால் அவரை காயப்படுத்த முடியாது. சிலுவையின் சாபத்தை இனி அவர் அனுபவிக்க வேண்டியதில்லை. இனி ஒரு போதும் கடவுள் அவரைக் கைவிடமாட்டார். புயலில் சிக்கிய கப்பலைக் காப்பாற்றி கரையில் பாதுகாப்பாக நங்கூரமிட்ட மாலுமி, தன் துயரங்கள் முடிவுக்கு வந்ததை நினைத்து எல்லாம் முடிந்தது என்று மகிழ்ச்சியில் சொல்வது போல இயேசு தன் சரீர பாடுகள் முடிவுக்கு வந்ததை நினைத்து ‘முடிந்தது’ என்று வெற்றி முழக்கமிடுகிறார்.

### 1. 2. இயேசுவின் ஊழியத்தின் நிறைவை வெளிப்படுத்துகிறது - Signifies the Completion of Jesus’ Mission

இந்த வார்த்தை சொல்லப்பட்ட சூழலை கவனிப்போமென்றால், யோவான் 19:28-30 வசனங்களின்படி, அதன் பின்பு, எல்லாம் முடிந்தது என்று இயேசு அறிந்து வேதவாக்கியம் நிறைவேறத்தக்கதாக... முடிந்தது என்று சொல்லி, தலையை சாய்த்து, ஆவியை ஒப்புக்கொடுத்தார். இந்த வசனங்களில் இரண்டு முறை பயன்படுத்தப்பட்ட முடிந்தது (tetelestai) என்ற கிரேக்க வார்த்தை. ஒரு குறிப்பிட்ட செயலின் முடிவையோ அல்லது ஒரு காலத்தின் முடிவையோ குறிக்கிறதாக இருக்கிறது. யோவானின் கூற்றுப்படி இயேசுவுக்கு கொடுக்கப்பட்ட வேலையும் அவருக்கு நியமிக்கப்பட்ட வேளையும் ஒருமிக்க முடிந்தது என்பதை இந்த முழக்கம் நமக்கு எடுத்துக்காட்டுகிறது. The time is also over and the mission is also complete. It’s a perfect fusion of time and mission.

புதிய ஏற்பாட்டில் பூரண ஆயுள் என்பது எண்களை அடிப்படையாக கொண்டதல்ல. 100 ஆண்டுகள் வாழ்ந்ததினால் ஒருவர் பூரண ஆயுளோடு வாழ்ந்தார் என்று சொல்ல முடியாது. பூரண ஆயுள் என்பது, தேவ சித்தத்தை அடிப்படையாக கொண்டது. அதாவது, ஒருவருக்கு தேவன் கொடுத்திருக்கும் வேலையும், தேவன் நியமித்திருக்கும் வேளையும் ஒரே கோட்டில் வந்து நிறைவடையுமென்றால், அது தான் பூரண ஆயுள்.

பொதுவாக இளம் வயதில் ஒருவர் இறந்துவிட்டால், அவர்கள் விட்டுச்சென்ற முடிக்கப்படாத வேலைகளை குறித்து நினைப்பதுண்டு, பேசுவதுண்டு. சில சமயங்களில் தேச தலைவர்கள் இளம் வயதிலேயே மரணிக்கும் போது, அவர்கள் இன்னும் சில வருடங்கள் வாழ்ந்திருந்தால் என்னவெல்லாம் சாத்திருப்பார்கள் என்று நாம் சிந்திப்பதுண்டு. இல்லையா? ஆனால் அந்த தேவை இயேசுவின் மரணத்தில் எழவில்லை. காரணம் அவருடைய வேலையும் அவருடைய வேளையும் ஒருமிக்க முடிந்தது. எல்லாம் முடிந்தது என்று அறிந்து "முடிந்தது" என்று முழக்கமிடுகிறார். கடவுள் கொடுத்த பணியும், கடவுள் நியமித்திருந்த நாட்களும் ஒன்று சேர முடிந்தது.

இயேசு இந்த உலகத்தில் வந்ததன் ஒரே குறிக்கோள், பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுவது. அதாவது மனுக்குலத்தின் மீட்புக்காக பலியாக மரிப்பது. இதை தன்னுடைய பன்னிரெண்டு வயதிலேயே இயேசு உணர்ந்து அறிக்கையிடுகிறார். என் பிதாவுக்கடுத்தவைகளில் நான் இருக்கவேண்டியதென்று நீங்கள் அறியீர்களா என்று தன்னை தேடி வந்த தாயை பார்த்து சொன்னார் (லூக்கா 2:49). இப்போது அந்த பணியை நிறைவு செய்திருக்கிறார். தான் வந்த வேலை நிறைவேறிவிட்டதை நினைத்து முடிந்தது என்று வெற்றி முழக்கமிடுகிறார். எஜமான் கொடுத்த வேலையை செய்து முடித்த பணியாளன் போல நிம்மதி பெருமூச்சுவிட்டார். கிரிக்கெட் விளையாடும் ஒருவர் சதமடித்து அணியை வெற்றி பெற செய்த வெற்றியின் சந்தோஷத்தை வெளிப்படுத்துவது போல, தனக்கு பிதா கொடுத்த வேலையை வெற்றியாய் முடித்ததை இயேசு வெளிப்படுத்தினார். எனவே முடிந்தது என்ற சொல் ஒரு சாதனை உணர்வைக் கொண்டுள்ள சொல்.

இந்த வார்த்தையில் அனைத்து பழைய ஏற்பாட்டு சடங்குகளும் நிறைவுபெற்று புது உடன்படிக்கை நிறுவப்படுவதை பார்க்கிறோம். இது கிரியைகளால் இரட்சிப்பின் முடிவையும் கிருபையால் இரட்சிப்பின் ஆரம்பத்தையும் குறிக்கிறது. இதற்கு முன்பு பாவநிவாரண பலியாக

ஒவ்வொரு ஆண்டும் ஆயிரக்கணக்கான மிருகங்களை பிரதான ஆசாரியன் பலியிட்டான். ஆனால் ஒரு முறை கூட முடிந்தது என்று அவரால் சொல்ல முடியவில்லை. காரணம் ஒவ்வொரு ஆண்டும் அந்த சடங்குகள் தொடர்ந்து கொண்டே இருந்து. ஆனால் இப்போது, கிறிஸ்துவின் ஒற்றைப்பலி, அந்த எல்லா பலிகளையும் தேவையற்றதாக்கிவிட்டது.

இதை எபிரெயருக்கு எழுதிய ஆக்கியோன் எபிரெயர் 10:11-14 யில் சொல்லும் போது: “அன்றியும், எந்த ஆசாரியனும் நாடோறும் ஆராதனை செய்கிறவனாயும், பாவங்களை ஒருக்காலும் நிவிர்த்திசெய்யக்கூடாத ஒரேவித பலிகளை அநேகந்தரம் செலுத்திவருகிறவனாயும் நிற்பான். இவரோ, பாவங்களுக்காக ஒரே பலியைச் செலுத்தி, என்றென்றைக்கும் தேவனுடைய வலதுபாரிசத்தில் உட்கார்ந்து, இனித் தம்முடைய சத்துருக்களைத் தமது பாதபடியாக்கிப்போடும்வரைக்கும் காத்துக்கொண்டிருக்கிறார். ஏனெனில் பரிசுத்தமாக்கப்படுகிறவர்களை ஒரே பலியினாலே இவர் என்றென்றைக்கும் பூரணப்படுத்தியிருக்கிறார்” என்கிறார். பழைய ஏற்பாட்டில் பாவங்களுக்கு ஏற்பவும், பாவம் செய்யும் நபருக்கு ஏற்பவும் பலிகள் செலுத்த வேண்டியிருந்தது. ஆனால் அந்த பலிகளையெல்லாம் இறைமகன் இயேசுவின் ஒற்றைப் பலி தேவையற்றதாக்கிவிட்டது என்பதை இந்த வார்த்தை வெளிப்படுத்துகிறது.

அந்த காலத்தில் நிலத்தையோ, கடனையோ வாங்கும் போது, அதற்கான முழுத் கிரயமும் செலுத்தப்பட்டுவிட்டது என்பதைக் காட்ட ‘முடிந்தது’ (tetelestai) என்ற வார்த்தையை முத்திரையாக பயன்படுத்தினார்கள். அதாவது இந்த காலத்தில் ரசீதுகளில் PAID என்று முத்திரை குத்துவதுபோல, அந்நாட்களில் tetelestai என்ற வார்த்தையைப் பயன்படுத்தினார்கள். ஆகவே இயேசு சிலுவையில் தொங்கின போது முடிந்தது என்று சொன்னது நமது பாவ மன்னிப்பிற்கான முழுக் கிரயத்தையும் அவர் செலுத்திவிட்டார் என்பதைக் காட்டுகிறது.

எனவே நாம் இனி நம்மை வருத்திக்கொண்டு இரட்சிப்புக்காய் பிற நம்பிக்கைகளை சார்ந்த மனிதர்களைப் போல - புனித பயணம் மேற்கொள்ளவோ, நம்மை காயப்படுத்திக்கொண்டு நம்முடைய பக்தியை வெளிப்படுத்த வேண்டிய அவசியமில்லை. காரணம் அவர் நமக்காய் யாவையும் செய்து முடித்துவிட்டார். நாம் செய்து சம்பாதிக்க எதுவும் இல்லை, அவர் நமக்கு இரட்சிப்பை இலவசமாய் சம்பாதித்து தந்;துவிட்டார் என்று இந்த வார்த்தை உறுதிப்படுத்துகிறது. திருச்சபை சீர்த்திருத்த தந்தை மார்ட்டின் லூத்தர் இதை “பெரிய பரிமாற்றம்”

(the great exchange) என்று விவரித்தார்.

## 3. இது விடாமுயற்சியின் அடையாளம் - A Sign of Perseverance

சிறப்பாக முடித்தல் என்பது மனிதனுக்கு கடினமாக தோன்றுகிற விஷயங்களில் ஒன்று. வாழ்க்கையை சிறப்பாக தொடங்குகிற பலர் மோசமாக முடிப்பதை நாம் பார்த்திருக்கிறோம். வேதபுத்தகத்தில் சவுல், சிம்சோன் போன்றவர்கள் அழகாக தங்கள் வாழ்க்கையை ஆரம்பித்தவர்கள், அசாத்தியமானவைகளை ஆண்டவருக்காக சாதித்தவர்கள், வாழ்க்கையின் ஓட்டத்தில் ஏதோ காரணங்களுக்காக தடுமாறி தோற்றுப்போனார்கள். பெரும்பாலான நேரங்களில் வாழ்க்கையின் விரக்தி, சோர்வு, விரைவில் வெளியேறும் போக்கு, நம்பிக்கையின்மை போன்ற காரணங்களால் அழகாய் ஆரம்பித்த வாழ்க்கையை நடுவழியில் கைவிடுகிறவன் மனிதன்.

ஆனால் இயேசுவின் இந்த வெற்றி முழக்கம், அவர் அழகாய் ஆரம்பித்த அவர் வாழ்க்கையை அழகாய் முடிப்பதையும் உறுதிசெய்கிறது. நம்மில் எத்தனை பேரால் வாழ்க்கையின் இறுதியில் பவுல் சொல்வது போல, “நல்ல போராட்டத்தை போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன். இது முதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது. நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்; எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார்” என்று சொல்ல முடியும்.

ஒருவேளை பாடுகள் உங்களை வருத்துகிறபடியால், வாழ்க்கையின் ஓட்டத்தில் பாதியில் வெளியேற வேண்டும் என்ற சிந்தை ஏற்பட்டால், இயேசு எல்லா வகையிலும் நம்மைப்போல சோதிக்கப்பட்டும் வெற்றி சிறந்தர் என்பதை நினைவில் கொள்ளுங்கள். அவர்தாமே சோதிக்கப்பட்டுப் பாடுபட்டதினாலே, அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவிசெய்ய வல்லவராயிருக்கிறார் (எபிரெயர் 2:18). பாடுகள் நிறைந்த இந்த உலகத்தில் மன உறுதியோடு போராடி தேவன் நியமித்த ஓட்டத்தை முடித்தேன் என்று சொல்வதற்கு இந்த வார்த்தை நம்மை உற்சாகப்படுத்துகிறது.

நம்முடைய வாழ்க்கையை நாம் ஒரு அலசலுக்கு உட்படுத்த இந்த ஆறாம் வார்த்தை நமக்கு அழைப்பு விடுக்கிறது. இயேசுவை மாதிரியாக கொண்டு, எல்லாம் நிறைவேறிற்று என மகிழ்ச்சியாக சொல்லும் நிலையில் நாம் இருக்கிறோமா? முழுமையாக கடவுளின் சித்தத்தை நிறைவேற்றுபவர்களாக இருக்கிறோமா? வாழ்க்கையின் இறுதியில், கடவுள் என்னைக் கொண்டு செய்ய நினைத்திருந்த வேலையை செய்து முடித்து விட்டேன் என்று நம்மால் சொல்ல முடியுமா? எல்லாம் நிறைவேறிற்று என்று அறிந்து, முடிந்தது என்று சொன்ன இயேசுவின் அடிச்சுவடுகளை பின்பற்றி, விசுவாசத்தை துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற அவரையே நோக்கி நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடகடவோம். ஆண்டவர் நம்மை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

# ஏழாம் வார்த்தை:

**இயேசு: பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன் என்று மகா சத்தமாய்க் கூப்பிட்டுச்சொன்னார்; இப்படிச் சொல்லி, ஜீவனைவிட்டார். லூக்கா: 23:46**

Writer Xavier,
Chennai.

மரண மொழிகள் எப்போதுமே வலிமையானவை. மரணத்தில் நழுவிய மனிதர்களைப் பற்றிப் பேசும்போது வழக்கமாக எல்லோரும் கேட்கும் கேள்விகளில் ஒன்று, 'கடைசியா என்ன சொன்னாரு ?' ! என்பது. அல்லது மரணத்தின் போது அருகே இருந்த மனிதர்கள் சொல்வார்கள், 'அவரு சாகிறதுக்கு முன்னாடி என்ன சொன்னாரு தெரியுமா?' இயேசுவின் சிலுவை மொழிகளும் அப்படித் தான் உலகப் புகழ் பெற்றவை. அதிலும் இந்த வாக்கியம் தான் அவர் கடைசியாகப் பேசியது !

இந்த வாக்கியத்துக்குச் சில சிறப்பம்சங்கள் உண்டு. கொல்கொதாவில் இயேசுவின் சிலுவையைச் சுற்றி யூதர்களும், ரோமர்களும் நிற்கின்றனர். இருசாராருக்குமே மனதில் சலனங்களை ஏற்படுத்தக்கூடிய வாக்கியமாக இந்த கடைசி சிலுவை வாக்கியம் அமைகிறது !

பழங்கால ரோமர்களிடையே ஒரு வழக்கம் இருந்தது. ஒருவர் மரணப் படுக்கையில் இருக்கிறார் என்றால் அவருடைய நெருங்கிய உறவினர்கள் எல்லாம் அவர் அருகே வந்து நிற்பார்கள். இறக்கப் போகும் நபரின் அருகே அவரது மிக நெருங்கிய உறவினர் இருப்பார். இறக்கப் போகும் நபரின் கடைசி மூச்சை, அந்த நபர் தனது வாயில் வாங்கிக் கொள்வார். இதன் மூலம் அவரது ஆன்மா அழியாமல், தனக்குள் வருவதாக அவர்கள் நம்பினார்கள். எனது கடைசி மூச்சை நான் என் மகனிடம் கொடுப்பேன், என் மகளிடம் கொடுப்பேன், என் மனைவியிடம் கொடுப்பேன் என்றெல்லாம் இறக்கப் போகும் நபர் முன்பே சொல்லி வைப்பதுண்டு. கடைசி மூச்சை வாங்குபவரே இறப்பவரின் இதயத்தோடு மிக மிக நெருங்கிய தொடர்பு உடையவர்.

இயேசு இங்கே, 'தந்தையே உம் கையில் என் ஆவியை ஒப்படைக்கிறேன்' என்று சொன்னபோது சுற்றியிருந்த ரோமர்கள் வியந்திருப்பார்கள்.

இயேசுவுக்கு விண்ணகத் தந்தை, கடவுள் தான் மிக மிக நெருங்கியவர் என்பதை அவர்கள் உணர்ந்திருப்பார்கள். சிலிர்த்திருப்பார்கள், பிரமித்திருப்பார்கள். அதனால் தான் அந்த நூற்றுவர் தலைவன் மனம் மாறுகிறார். உண்மையிலேயே இவர் நேர்மையாளர் என சான்று பகர்கிறார். அவர் பின்னர் இயேசுவின் சீடர்களைச் சந்தித்ததாகவும், இயேசுவின் சீடராக மாறியதாகவும் மரபுக் கதைகள் சொல்கின்றன.

இப்போது யூதர்களுக்கு வருவோம். யூதர்களைப் பொறுத்தவரை இது புதிய சொற்றொடர் அல்ல. “உமது கையில் எனது உயிரை ஒப்படைக்கிறேன்” என்பது ஒரு செபம். சங்கீதம் 31 : 5ம் வசனம். யூதக் குழந்தைகளுக்கு அவர்களுடைய பெற்றோர் சொல்லிக் கொடுக்கும் முதல் செபம் அது தான். அவர்கள் இரவில் தூங்கப் போகும்போது கடைசியாகப் பேசும் செபம் அது தான் ! இதோ இரவில் நான் தூங்கச் செல்கிறேன். இப்போது என் உயிரை உமது கையில் ஒப்படைக்கிறேன். ஒருவேளை நான் விழிக்காமல் போனால் என் ஆத்மா உம்மிடம் இருக்கட்டும். என்பது தான் அதன் பொருள்.

இயேசுவுக்கும் அன்னை மரியாள் அந்த செபத்தை நிச்சயம் கற்றுக் கொடுத்திருப்பார். அதை தினமும் செபிக்கும் வழக்கம் இயேசுவிடம் இருந்திருக்கலாம். இரவில் துயிலச் செல்லும் முன் சொல்லும் செபத்தை. இதோ சாவுக்குள் நுழையும் முன் இயேசு சொல்கிறார். ஒரு மழலையின் மனதுடன், தந்தையிடம் தன் உயிரை ஒப்படைக்கிறார். வலியின் உச்சத்திலும், வேதனையின் ஆழியிலும் தனது தந்தையிடம் தன்னை ஒப்படைக்கும் செபத்தை இயேசு மறக்கவில்லை, மறுக்கவில்லை ! சிலுவையைச் சுற்றியிருந்த அத்தனை யூதர்களின் மனதிலும் ஒரு மணி அடித்திருக்க வேண்டும் ! இயேசுவை ஒரு கணமேனும் அவர்கள் வியப்புடனோ, அதிர்ச்சியுடனோ, பயத்துடனோ, மரியாதையுடனோ பார்த்திருக்க வேண்டும்.

இதோ, இந்த மரணம் மூன்று மணிக்கு நிகழ்கிறது ! மூன்று மணி என்பது பாஸ்கா ஆட்டை அடிக்கும் காலம். பாஸ்கா ஆட்டைப் பலியிடும் நேரம். அடிக்கப்பட வேண்டிய ஆடு ஒரு வயதான குட்டி ஆடு. ஒரு வயதான ஆடு என்பது முப்பது வயதான மனிதருக்கு இணை என்கிறார்கள். அப்படிப் பார்த்தால் இதோ ஒரு வயதான, பலிக்குத் தோதான, சரியான ஆட்டுக்குட்டி அடிக்கப்படுகிறது. அதே மூன்று மணிக்கு ! சற்றும் பிசகாமல். பலியாடு தன் உயிரை மனுக்குலத்தின் மீட்புக்காகக் கையளிக்கிறது.

என் உயிரை யாரும் பறித்துக் கொள்ள முடியாது. நானே தந்தையிடம்

கையளிப்பேன். என் உயிரைக் கையளிக்கவும், எடுத்துக் கொள்ளவும் எனக்கு அதிகாரம் உண்டு என இயேசு என்றோ பேசியது இன்று நிறைவாகிறது !

விடுதலைப்பயணம் (யாத்திராகமம்) 29ம் அதிகாரம் இரண்டு பலிகளைப் பற்றிப் பேசுகிறது. காலையில் ஒன்று, மாலையில் ஒன்று என இரண்டு ஆடுகளைப் பலியிடும் நிகழ்வு அது. திராட்சை இரசம், கோதுமை போன்றவற்றோடு செய்யப்படுகின்ற பலி இது! இயேசு தனது உடலையும், இரத்தத்தையும் அப்பத்துக்கும் இரசத்துக்கும் ஏன் ஒப்புமைப் படுத்தினார் என்பதற்கும் இந்த ஆன்மிக சிந்தனை பொருந்தி வருகிறது. தானே பலியாடாகவும், தானே இரசமாகவும், தானே கோதுமையாகவும் இருக்கிறார் இயேசு.

திருமுழுக்கு யோவானின் குரலொலி மனதில் எழுகிறதா? இதோ கடவுளின் ஆட்டுக்குட்டி. ஆட்டுக்குட்டியாம் இவரே உலகின் பாவத்தைப் போக்குபவர்! என இயேசுவைப் பார்த்து குரலெழுப்பியிருந்தார் யோவான். இயேசுவை பலியாய் அடையாளப்படுத்தியவர் அவர்.

விடுதலைப்பயணம் குறிப்பிடும் இரண்டு பலிகளையும் செலுத்தும் நேரம் தான் வியப்பானது. ஒன்று காலை ஒன்பது மணி, இன்னொன்று மாலை மூன்று மணி என்கின்றனர் விவிலிய ஆய்வாளர்கள். இங்கே இயேசுவின் சிலுவை மரணத்தில் இயேசு காலை ஒன்பது மணிக்கு சிலுவையில் அறையப்படுகிறார். செம்மறி பலிபீடத்தில் கிடத்தப்படுகிறது. மாலை மூன்று மணிக்கு உயிரைக் கையளிக்கிறார். சற்றும் பிசகாத கால அளவு ! மாலை மூன்று மணி என்பது செபநேரம் என்பதை யோவானும், பேதுருவும் ஆலயத்துக்கு அந்த வேளையில் சென்ற பிற்கால நிகழ்வுடன் ஒப்பிடலாம் !

இஸ்ரேல் மக்கள் எகிப்தை விட்டு வெளியேறிய அந்த பாஸ்கா விழா, இதோ இன்று இறைமகனின் பலியோடு நிறைவு பெறுகிறது. ஆட்டுக்குட்டியின் இரத்தம் நிலைக்கால்களில் பூசப்பட்ட நிகழ்வு, ஆயனாய் வந்த ஆட்டுக்குட்டியின் இரத்தம் நிலை வாழ்வுக்காய் பூசப்படுவதுடன் நிறைவு பெறுகிறது. இந்த மூன்று மணிக்கு நிகழும் பலியின் போது சொல்லப்படும் செபம் தான்' 'உம்கையில் என் உயிரை ஒப்படைக்கிறேன்' எனும் செபம். அந்த செபத்தோடு, தந்தையே என சேர்த்து இயேசு அதை ஆழமான உறவுக்குள் கொண்டு வருகிறார். எல்லாம் ஒரே புள்ளியில் இணைகின்றன.

உலகின் பாவத்தைச் சுமந்ததால் இறைவனின் அருகாமையை விட்டு விலகிச் செல்ல வேண்டிய கட்டாயத்தில் விழுந்தவர் இயேசு. அப்போது, “இறைவா, ஏன் என்னை கைவிட்டீர்” என கதறினார். கடவுளின் கோபத்தின் அடையாளமான இருள் வந்து பிரதேசத்தை மூன்று மணி நேரம் மூடியது. நமது பாவங்களுக்காய் தந்தையால் நிராகரிக்கப்பட்டு, மரண வேதனையை அந்தக் காலகட்டத்தில் இயேசு அனுபவித்தார். இப்போது துன்பக் கிண்ணத்தைக் குடித்துமுடித்தாயிற்று எனவே, தந்தையே என அழைக்கிறார்.

மனிதனாய் மண்ணில் வந்து, தந்தையின் விருப்பப்படி வாழ்ந்து, அவரது விருப்பப்படி மரணித்த இயேசு, கடைசியில் தனது ஆவியையும் தந்தையின் கரங்களில் ஒப்படைக்கிறார்.

ஊருக்கு திரும்பும் ஒரு தொலைதூரப் பயணியின் ஆறுதலாய், தாயின் தோள்களில் தாவி ஏறும் ஒரு மழலையின் குதூகல மனநிலையாய், இயேசு தனது மண் வாழ்வை முடித்து வைக்கிறார். மீட்பின் கதவைத் திறந்து வைக்கிறார். இடைப்பட்ட திரைச்சீலையைக் கிழித்து வைக்கிறார்.

நமது உயிர் இறைவனின் உயிர் மூச்சினால் உருவானது. அந்த உயிர்மூச்சு இறைவனிடமே திரும்பிச் செல்லும் எனும் உத்தரவாதமே இவ்வுலக வாழ்வை மகிழ்ச்சியாக்கும். உயிரின் பிறப்பிடமும், உயிரின் புகலிடமும் இறைவனின் கரங்களே
.
சிலுவையில் இயேசு ஏழு வார்த்தைகளைச் சொன்னார். ஏழு என்பது முழுமையைக் குறிப்பது.தனது வாழ்வின் முழுமையை இயேசு வெளிப்படுத்துகிறார்.

முதல் வாசகம் மன்னிப்பைப் பேசியது, இரண்டாவது வாசகம் மீட்பைப் பேசியது, மூன்றாவது வாசகம் பரிவைப் பேசியது, நான்காவது வாசகம் துயரத்தைப் பேசியது, ஐந்தாவது வாசகம் ஏக்கத்தைப் பேசியது, ஆறாவது வாசகம் வெற்றியைப் பேசியது, ஏழாவது வாசகம் ஆறுதலைப் பேசியது !

ஆன்மீகத்தின் முழுமையும், செழுமையும் இயேசு பேசிய வார்த்தைகளுக்குள் அடங்கி விட்டன எனலாம்.

‘தந்தையே உம் கைகளின் என் உயிரை ஒப்படைக்கிறேன்’ எனும் வார்த்தையில் நம்பிக்கை வெளிப்படுகிறது. தந்தை தன்னை

கைவிடமாட்டார் என முழுமையாய் நம்பும் மழலையின் மனநிலை அது. “நீங்கள் குழந்தையாய் மாறவேண்டும்” என இயேசு குறிப்பிட்டது தந்தை மீது கொள்ளவேண்டிய முழுமையான நம்பிக்கையையும் குறிக்கும்.

தந்தையின் கரங்கள் ஆறுதலின் கரங்கள். தந்தையின் தோள்களில் துயிலும் மழலை எத்தனை சத்தங்களுக்கு இடையே வாழ்ந்தாலும் நிம்மதியாய் உறங்கும். பெற்றோரின் அருகாமை இல்லையேல் நிசப்தமான பஞ்சு மெத்தை கூட அவர்களை கலங்கடிக்கும். தூங்க விடாமல் செய்யும். இறைவனின் கரங்களில் நமக்கு ஆறுதல் கிடைக்கிறதா ?

தந்தையின் கரங்களில் கிடைப்பது முழுமையான பாதுகாப்பு. தந்தையின் விரலைப் பிடித்துக் கொண்டு செல்லும் மழலையின் முகத்தைப் பார்த்திருக்கிறீர்களா ? உலகின் எந்த பெரிய வீரன் வந்தாலும் தந்தை தன்னைப் பார்த்துக் கொள்வார் எனும் அதிகபட்ச நம்பிக்கை அந்த கண்களில் மின்னும். இதைவிடப் பெரிய பாதுகாப்பு இனிமேல் இல்லை எனும் நிம்மதி அந்த முகத்தில் தெரியும்

நமது வாழ்க்கை எப்படி இருக்கிறது என்பதை இந்த வாசகம் கேட்கிறது. இறைவனின் சித்தத்தை நிறைவேற்றுபவர்களுக்கு மட்டுமே தந்தையின் கரம் கிடைக்கும் ! தந்தையின் விருப்பத்தை நிராகரித்து நடப்பவர்கள் எப்போதுமே அந்த கரங்களுக்குள் அடைக்கலம் புகுவதில்லை.

அந்த நம்பிக்கையைப் பெறுவதற்குரிய வகையில் நமது வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும்.

தந்தையின் கரத்தோடு இணைந்து இருப்பவர்களுக்கே ஆறுதல் கிடைக்கும். நமது வாழ்க்கை எதில் ஆறுதல் அடைகிறது . உலகத்தின் கரங்களிலா ? அல்லது உன்னதரின் கரங்களிலா ?

தந்தையோடு இருப்பதே உண்மையான பாதுகாப்பு. நமது வங்கிக் கணக்குகளும், நில புலன்களும் நமக்கான பாதுகாப்பல்ல. களஞ்சியத்தை எவ்வளவு தான் இடித்துக் கட்டினாலும் ஆன்மா இழந்து போனால் என்ன பயன் ?நமது நம்பிக்கையை அழிந்து போகும் செல்வங்களிலிருந்து மாற்றி, இறைவனின் அருகாமையில் வைப்போம்.

“என் ஆடுகள் எனது குரலுக்குச் செவிசாய்க்கின்றன. எனக்கும் அவற்றைத் தெரியும். அவையும் என்னைப் பின்தொடர்கின்றன. நான்

அவற்றிற்கு நிலைவாழ்வை அளிக்கிறேன்..” என யோவான் 10:27 -28 ல் இயேசு கூறினார். இயேசுவின் கரங்கள் ஆயனின் கரங்கள். அவை நம்மைப் பற்றிக் கொள்ள ஆயத்தமாய் இருக்கின்றன. பற்றிக் கொண்டால் விட்டு விடாமல் பாதுகாக்கவும், ஆறுதலை அளிக்கவும், நம்பிக்கை அளிக்கவும் அவை தயாராக இருக்கின்றன !

நமது இதயம் எங்கே இருக்கிறது ? இறைவனின் கரங்களிலா ? உலகத்தின் கரங்களிலா ?

“நம்பிக்கையைத் தொடங்கி வழி நடத்துபவரும் அதை நிறைவு செய்பவருமான இயேசுவின் மீது கண்களைப் பதிய வைப்போம்.

பல இறை மனிதர்களின் வாழ்க்கையைப் பார்த்தால், கடைசியில் அவர்கள், ‘இயேசுவே உம் கரங்களில் என் ஆவியை ஒப்படைக்கிறேன்” என சொல்லி மரணத்தைத் தழுவிக் கொண்டதைப் பார்க்க முடியும்.

நமது வாழ்க்கையின் முடிவில் மகிழ்ச்சியாய் நாம் சொல்ல வேண்டும், தந்தையே இதோ உம் கரங்களில் என் ஆவியை ஒப்படைக்கிறேன்.



# நாங்கள் உங்களிடத்தில் எதிர்பார்ப்பது

நீங்கள் இந்த பத்திரிகையால் ஆசீர்வதிக்கப்பட்டால்,
தயவு செய்து உங்கள் கிறிஸ்தவ நண்பர்களோடு
இதை பகிர்ந்து கொள்ளுங்கள்

மாதந்தோறும் இப்பத்திரிகையை நீங்கள் பதிவிறக்கம் செய்ய
விரும்பினால், +918668047378 என்ற Whatsapp
எண்ணுக்கு <SEED MAG> என sms அனுப்பவும்.

உங்களால் முடிந்தால் இந்த பத்திரிகையை கறுப்பு
வெள்ளையில் அச்சிட்டு electronics device
இல்லாதவர்களுக்கு படிக்க கொடுத்து உதவுங்கள்

உங்கள் படைப்புகளையும் அனுப்பலாம். தகுதியுள்ளவைகள்
பிரசுரிக்கப்படும்.

இறை மக்கள் சிலருடைய பண உதவியினாலே
இந்த பத்திரிகையை எங்களால் வெளியிட முடிகிறது,
நீங்களும் நன்கொடை அளிக்க கடவுளால் உந்தப்பட்டால்
அனுப்பலாம். உற்சாகமிருந்தால் மட்டுமே, கட்டாயமல்ல

அன்புடன்: Bro. மெர்லின், நல்ல நிலமாகு நண்பா

**நன்கொடை அளிக்க விரும்புபவர்களுக்கு...**

QR Code

Google Pay id: +91 9486954577
BHIM/UPI : merlin.kannanoor@okaxis

Account Number: 0480053000011726
IFSC: SIBL0000480
Account Name: MERLIN S
Branch Name : MARTHANDAM
Bank Name: South Indian Bank